உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சொக்கேசர் தாலாட்டு

என்னும்

மதுரைச்

சொக்கலிங்கப்பிபெருமானது

திருவிளையாடல்

முதலிய

புராணசாரம்.

பெரியகுளம்

கருவை-சங்கரலிங்கம்பிள்ளை

இயற்றியது.

சென்னை :

பண்டித மித்திர யந்திரசாலையிற்

பதிப்பிக்கது.

சர்வாதிகாரி வைகாசிமீ உருவ

[Copy Right Registered.]

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிறப்புக்கவிகள்.

சென்னைக் கிறிஸ்தவகலாசாலைத் தலைமைத்தமிழ்ப்பண்டிதர்
பிரமஶ்ரீ, வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியாரவர்கள், பி. ஏ.,
சொல்லிய

நேரிசை வெண்பா.

தித்திக்குந் தேனிற் சிறுரு மகிழ்ந்துண்ண
முத்திக்கு வித்தாய் மொழிந்தனனே—யெத்திக்குந்
தங்குபுகழ்ச் சொக்கேசர் தாளிட்டைத் தென்கருவைச்
சங்கரலிங் கக்கவிஞன் ரூன்.

வேப்பத்தூர்ச் சங்கவித்துவான்களி லொருவராகிய
பெரிய சாமாவையரவர்கள் குமாரர் சிலேடைப்புலியாகிய
பிரமஶ்ரீ, பிச்சுவையரவர்கள் சொல்லிய

நேரிசைவெண்பா.

பாலாட்டு மன்பர் பணிமதுரைச் சொக்கேசர்
தாலாட்டுச் செந்தமிழைச் சாற்றினூன்—சாலோட்டத்
தேன்சங் கரவஞ்செய் செய்க்கருவை மேவியபூ
மான்சங் கரலிங்க மன்.

ஷையார் கனிஷ்டராகிய

பிரமஶ்ரீ, சுப்பையரவர்கள் சொல்லிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காலாட்டுங் கொடிகளென்று மண்டலமீ துற்றருணன் கையா
லோச்சி, வாலாட்டு மெழுபரியைத் தூண்டுதல்போற் படபடென
மருமம் தாக்கிச், சேலாட்டுங் கொடிகளொடு சேர்ந்தெழிலார் கூட

னகர்த் திருச்சொக் கேசர், தாலாட்டுத் தமிழ்க்கருவைச் சங்கரலிங் கக்குரிசில் சாற்றி னனே.

ஷையூர்ச் சங்கவித்துவான்களிலொருவராகிய சாமாவையரென்ற
ஆண்டியையரவர்கள் குமாரன்
சௌந்தரமையரவர்கள் சொல்லிய
நேரிசை வெண்பா.

மாட்சிமைசேர் தென்கூடன் மான்மியத்தைக் கற்பகத்தின்
காட்சிதருஞ் சங்கரலிங் கக்கவிஞன்—ஆட்சியருள்
சொக்கேசர் தாலாட்டாய்ச் சொன்னனம் மீசர்செ
விக்கே மகிழ்ச்சியுற வே.

திருமயனூர் மு-ரா-ரா-ஸ்ரீ, தாமரை
உ - மகாலிங்கம்பிள்ளையவர்கள், பி. ஏ., சொல்லிய
எழுசீர்க்கழிநெடிலாசிரிய வண்ணவிருத்தம்.

வேரிப் பூம்பொழி லால வாயமர் வித்த கன்விளை யாட்டினை
மாரிக் கென்றும் வறப்பி லாமை வளங்கொள் தொன்னக ராயுபே
ரேரிக் கேர்தரு வாறு திக்திசை யேய்ந்த சொக்கர்தா லாட்டதாப்
பாரிற் சங்கர லிங்க நாவலன் பண்பி னனளித் தானரோ.

பெரியகுளமென்னுங் குளந்தைமாநகர்த் தலபுராணம்பாடிய
ம-ரா-ரா-ஸ்ரீ, வண்ணக்கவி
சர்க்கரையப்ப பிள்ளையவர்கள் சொல்லியது.
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கண்டார்சொல் லங்கயற்கட் பாகர்திரு விளையாட்டைக்கருத்தி
னேர்ந்து, கண்டார்சொக் கில்லாது துதித்துள்ள வானத்தக் களிப்பி
னேங்கக், கண்டார்சொக் கேசர்கழற் முலாட்டுப் புனைந்தேற்றிக்
கருணை பூண்டான், கண்டார்சொன் னங்கதிசூழ் கருவைச்சங் கர
லிங்கக் கவிவல் லோனே.

சொக்கேசர் தாலாட்டின் அட்டவணை.

இலக்கம்.	திருவிளையாடல் முதலியவைகளின் பெயர்.	கண்ணித் தொகை.	பக்கம்.
	பாயிரம்.	ரு	க
	பாண்டித்திருநாட்டுச்சிறப்பு.	உரு	உ
	மதுரைத்திருநகரச்சிறப்பு.	ஙரு	ச
	தலவிசேடம்.	கக	எ
	தீர்த்தவிசேடம்.	கஉ	ஙு
	மூர்த்திவிசேடம்.	உடு	கo
	ஆதித்திருவிளையாடல்கள்.		
	கடம்பவனகாண்டம் (முற்பாகம்.)		
க	வேதாகமங்கள் கடம்பவனமான திருவிளையாடல்.	உக	கஉ
உ	வேதாகமங்களுக்கு வரங்கொடுத்த திருவிளையாடல்.	அ	கச
ங	கடம்பவனத்தில் நடம்புரிந்ததிருவிளையாடல்.	கரு	கடு
ச	மகாகைலமான்மியம் உரைத்த திருவிளையாடல்.	டுo	கசு
ஞ	தேவி யிறம்வளர்த்த திருவிளையாடல்.	உக	உக
ரு	திருமால் வரம்பெற்ற திருவிளையாடல்.	கஉ	உரு
எ	அயன் பாவந்தீர்த்த திருவிளையாடல்.	உஉ	உச
அ	மலையரசன் மலையத்துவசனான திருவிளையாடல்.	கச	உரு

இலக்கம்.	திருவிளையாடல் முதலியவைகளின் பெயர்.	கண்ணித் தொகை.	பக்கம்.
	அறுபத்துநான்கு திருவிளையாடல்கள்.		
	கடம்பவனகாண்டம் (பிற்பாகம்.)		
க	இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடல்.	கஉ	உஎ
உ	வெள்ளையானை சாபந்தீர்த்த திருவிளையாடல்.	கஉ	உஅ
	[மதுரைக்காண்டம்.]		
ங	திருநகரங்கண்ட திருவிளையாடல்	சு	ஙo
ச	தடாதகைப்பிராட்டியார் திருவவதாரச் திருவிளையாடல்.	ஙக	ஙo
ஞ	திருமணஞ்செய்த திருவிளையாடல்.	உங	ஙஉ
சு	வெள்ளியம்பலத்திருக்கூத்தாடிய திருவிளையாடல்.	ங	ஙச
எ	குண்டோதரனுக் கன்னமிட்ட திருவிளையாடல்.	ச	ஙச
அ	அன்னக்குழியும் வையையுமழைத்த திருவிளையாடல்.	ங	ஙஞ
க	எழுகடலழைத்த திருவிளையாடல்.	ச	ஙஞ
கo	மலயத்துவசனை யழைத்த திருவிளையாடல்.	சு	ஙசு
கக	உக்கிரபாண்டியன் திருவவதாரத் திருவிளையாடல்.	உ	ஙசு
கஉ	உக்கிரகுமார பாண்டியனுக்கு வேல்வளை செண்டு கொடுத்த திருவிளையாடல்.	ச	ஙஎ
கங	கடல்சுவற வேல்விட்ட திருவிளையாடல்.	உ	ஙஎ
கச	இந்திரன் முடிமேல் வளையெறிந்த திருவிளையாடல்.	சு	ஙஅ

இலக்கம்.	திருவிளையாடல் முதலியவைகளின் பெயர்.	கண்ணித் தொகை.	பக்கம்.
கரு	மேருவைச்செண்டாலடித்த திருவிளையாடல்.	ச	ஈஅ
கசு	வேதத்துக்குப் பொருளருளிச்செய்த திருவிளையாடல்.	உ	ஈகூ
கஎ	மாணிக்கம்விற்ற திருவிளையாடல்.	ஈ	ஈசூ
சஅ	வருணன்விட்ட கடலை வற்றச்செய்த திருவிளையாடல்.	ஈ	சo
	[கூடற்காண்டம்.]		
ககூ	நான்மாடக்கூடலான திருவிளையாடல்.	ஈ	சo
உo	எல்லாம் வல்லசித்தரான திருவிளையாடல்.	உ	சக
உக	கல்லானைக்குக் கரும்பருத்திய திருவிளையாடல்.	ஈ	சக
உஉ	யானையெய்த திருவிளையாடல்.	ஈ	சக
உஈ	விருத்தகுமார பாலரான திருவிளையாடல்.	கச	சஉ
உச	மாறியாடிய திருவிளையாடல்.	ரு	சஈ
உரு	பழியஞ்சின திருவிளையாடல்.	ஈ	சச
உசு	மாபாதகந்தீர்த்த திருவிளையாடல்.	ச	சச
உஎ	அங்கம் வெட்டின திருவிளையாடல்.	உ	சரு
உஅ	நாகமெய்த திருவிளையாடல்.	ஈ	சரு
உக	மாயப்பசுவை வதைத்த திருவிளையாடல்.	ஈ	சசு
ஈo	மெய்க்காட்டிட்ட திருவிளையாடல்.	சு	சசு
ஈக	உலவாக்கிழியருளிய திருவிளையாடல்.	ஈ	சஎ
ஈஉ	வளையல்விற்ற திருவிளையாடல்.	ரு	சஎ
ஈஈ	அட்டமாசித்தி யுபதேசித்த திருவிளையாடல்.	ஈ	சஅ
ஈச	விடையிலச்சினையிட்ட திருவிளையாடல்.	ரு	சஅ
ஈரு	தண்ணீர்ப்பந்தல் வைத்த திருவிளையாடல்.	ச	சக
ஈசு	இரசவாதஞ்செய்த திருவிளையாடல்.	கo	சக

இலக்கம்.	திருவிளையாடல் முதலியவைகளின் பெயர்.	கண்ணித் தொகை.	பக்கம்.
கூஎ	சோழனை மடுவில் வீட்டிய திருவிளையாடல்.	உ	நூ0
கூஅ	உலவாக்கோட்டை யருளிய திருவிளையாடல்.	உ	நுக
கூக	மாமனுகவந்து வழக்குரைத்த திருவிளையாடல்	ஈ	நுக
சo	வரகுணனுக்குச் சிவலோகங்காட்டிய திருவிளையாடல்.	நு	நுஉ
சக	விறகுவிற்ற திருவிளையாடல்.	க	நுஉ
சஉ	திருமுகங்கொடுத்த திருவிளையாடல்.	ங	நுஈ
சஈ	பலகையிட்ட திருவிளையாடல்.	சு	நுச
சஉ	இசைவாதுவென்ற திருவிளையாடல்.	கஉ	நுநு
சநு	பன்றிக்குட்டிக்கு முலைகொடுத்த திருவிளையாடல்.	கo	நுசு
சசு	பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய திருவிளையாடல்.	கo	நுஎ
சஎ	கரிக்குருவிக் குபதேசஞ்செய்த திருவிளையாடல்.	சு	நுஅ
சஅ	நாரைக்கு முத்திகொடுத்த திருவிளையாடல்.	நு	நுக
	[திருவாலவாய்க்காண்டம்.]		
சகூ	திருவாலவாயான திருவிளையாடல்.	நு	நுகூ
நூo	சுந்தரப்பேரம்பெய்த திருவிளையாடல்.	ஈ	சூo
நுக	சங்கப்பலகைதந்த திருவிளையாடல்.	எ	சூக
நுஉ	தருமிக்குப் பொற்கிழியளித்த திருவிளையாடல்.	கஉ	சூக
நுஈ	கீரனைக்கரையேற்றிய திருவிளையாடல்.	உ	சூஈ
நுச	கீரனுக்கிலக்கணமுபதேசித்த திருவிளையாடல்	ஈ	சூஈ
நுநு	சங்கத்தார் கலகந்தீர்த்த திருவிளையாடல்.[டல்.	ச	சூகூ
நுசு	இடைக்காடன் பிணக்குத்தீர்த்த திருவிளையா	அ	சூச

இலக்கம்.	திருவிளையாடல் முதலியவைகளின் பெயர்.	கணனித் தொகை.	பக்கம்.
ருஎ	வலைவீசின திருவிளையாடல். [டல்.	கசு	சுருி
ருஅ	திருவாதவூரடிகளுக்குபதேசித்த திருவிளையா	க	சுசு
ருக	நரிபரியாக்கிய திருவிளையாடல்.	ச	சுஎ
சுo	பரிநரியாக்கிய திருவிளையாடல்.	ங	சுஅ
சுக	மண்சுமந்த திருவிளையாடல்.	கங	சுஅ
சுஉ	பாண்டியன் சுரந்தீர்த்த திருவிளையாடல்.	சு	சுக
சுங	சமணரைக்கழுவேற்றிய திருவிளையாடல்.	கo	ஏo
சுச	வன்னியுங்கிணறு மிலிங்கமுமழைத்த திருவிளையாடல்.	கo	எக

அற்புதத்திருவிளையாடல்கள்.

[திருக்தொண்டர்வைபவகாண்டம்.]

க	மூர்த்திக்கரசளித்த திருவிளையாடல்.	கஎ	எஉ
உ	காரியார்பாரியார் பாப்பகுந்துகொண்ட திருவிளையாடல்.	கஉ	எச
ங	உக்கிரனுக்குப் புன்னைவனத்திற் காட்சிநல்கிய திருவிளையாடல்.	கசு	எருி
ச	இராமருக்கருள்புரிந்த திருவிளையாடல்.	கo	எஎ
ருி	கொடும்பாவிக்கு முத்திகொடுத்த திருவிளையாடல் (அட்டமிப்பிரசக்ஷணவிதி.)	ங.சு	எஅ
சு	திருநீலகண்டயாழ்ப்பாணருக்குப் பொற்பலகை தந்த திருவிளையாடல்.	கக	அக
எ	தண்மதன்முதலிய வேடருக்கு முத்திகொடுத்த திருவிளையாடல்.	உ.ங	அஉ
அ	வசிட்டாதியர் பூசித்த திருவிளையாடல்.	கo	அச
	மங்களவாழ்த்து.	கருி	அருி

இந்நூலுக்காதாரமாய்க்கொண்ட புராண முதலியவை.

க. திருவிளையாடற்புராணம் பரஞ்சோதிமுனிவரருளியது.
உ. ஷை ஷை வேம்பத்தூராரருளியது.
ங. கடம்பவனபுராணம்.
ச. திருவாப்பனூர்ப்புராணம்.
ஞ. திருப்பரங்கிரிப்புராணம்.
ட. திருவாதவூர்புராணம்.
ண. திருப்பூவணப்புராணம்.
த. திருப்பெருந்துறைப்புராணம்.
ந. சேதுபுராணம்
ப. திருவுத்தரகோசமங்கைப்புராணம்.
ம. திருநெல்வேலிப்புராணம்.
ய. சங்கரநாராயணர் கோயிற்புராணம்.
ர. குளந்தைநகர்த்தலபுராணம்.
ல. பழநித்தலபுராணம்.
வ. பெரியபுராணம்.
ழ. கந்தபுராணம்.
ள. சிவாகமம்.
ற. இறையனார் அகப்பொருள்.
ன. தேவாரம்.
உ. திருவாசகம்.
உக. கைவல்வியம்.
உஉ. சிலப்பதிகாரம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சொக்கேசர் தாலாட்டு

ஏன்னும்

மதுரைச் சொக்கலிங்கப்பெருமானது

திருவிளையாடல் முதலிய

புராணசாரம்.

பாயிரம்.

காப்பு.

சீர்வளருஞ் சொக்கேசர் செய்த விளையாட்டைப்
பார்வளருந் தாலாட்டாப் பாடவே சுந்தரரும். க.

சத்திபீ டத்துத் தடாதகையாந் தாயாருஞ்
சித்தி விநாயகருஞ் செவ்வேளுங் காப்பாமே. உ.

பவளவாய்ச் செவ்வரிக்கட் பண்ணிசையாழ் முத்துவடத்
தவளநிற நுண்ணிடைவெண் டாமரைவாழ் தாய்பதமே. ங.

சிவனுடல் சொல்லவெட்கிச் சிந்தையினேர் தட்டிமுத்து
மவனருளாற் சொல்லமிகு மாசை கனத்ததுவே. ச.

முன்பே சிவமுளைத்த மூதூர் மதுரைநகர்
தென்பாண்டி நாடே சிவமரசாள் நாடென்பர். ஞ.

நாட்டுவள மூரின்வள நற்புலவோர் மூன்மொதுவாய்த்
தீட்டினரான் மேற்சிறப்பைச் செப்பக்கே ளென்மகவே. சு.

பாண்டித் திருநாட்டுச் சிறப்பு.

உலகுபுகழ் பாண்டிநாட் டோங்குசிறப் பேசிறப்பாம்
பலருமிங்கு வந்துதவம் பண்ணும் பொதிகையுண்டு. க.

தென்கைலை பென்றேத்துஞ் சீரியர்சே ரம்மலையிற்
றென்மொழிவை கைபொருநை தென்றிலிவை தோன்றிவரும். உ.

வராகமிட பம்பசுநீள் வன்னகம் யானைமலை
பராபரஞ்செய் யாடலிலுற் பாண்டிநா டேற்றனவே. ங.

குடமுனிவன் கொண்டுவந்துங் குண்டோ தரன்பொருட்டுஞ்
சடைக்கங்கை யெபொருநை தண்வைகை யானதுவே. ச.

தமிழறியும் வைகைமணல் தாணுமுடி மேற்பொருந்தி
யமிழ்துநிக ரன்னமூமா யர்ச்சகர்க்கூ ணைதுவே. ஞ.

ஆற்றுநீர் வற்றிடினு மம்மணலின் கீழ்ச்சுரக்கு
மூற்றுநீர் கால்வழிபோ யூட்டுமிதற் கொப்பேது. சு.

என்புமின்னுங் கல்லாகு மேற்றமுறு மிந்நதிதா
னன்பொடுல கூட்டுமென்ப தாச்சரிய மன்றுபின்னும். எ.

தமிழ்மணக்கும் வைகைதனைத் தான்மணக்க வாரிவளை
யுமிழ்முத்தைத் தாமிரத்து டோங்கல்பாற் றூதுவிடும். அ.

குணகடனீள் வெள்ளாறு கூறுகன்னி யாகுமரி
பணைவழிபு நாற்புறஞ்சூழ் பாண்டிநாட் டெல்லைகளே. கூ.

சேனைமுடி சிந்தவளே தென்னனெறி யப்பயந்து
சோனையொடு கார்மழையுஞ் சொற்படியே பெய்ந்நாடு. கo.

சித்ரசபை குற்றூலஞ் செப்புமன்ற நெல்வேலி
ரத்னம்பொன் வெள்ளிமது ரைம்மூன்றே டைந்துமுறும். கக.

குழந்தையாட் டாறுபடை கொள்பரங்குன் றஞ்செந்தில்
பழமுதிர்சோ லம்மூன்றும் பாண்டிநாட் டேயுளவே. கஉ.

தேவர்வாழ் தென்மலையுந் தெய்வயா னைம்மணமுந்
தேவர்சே னைபதியுஞ் சேர்தெய்வ நாடிதுவே. கங.

நன்னவற் றீவுச்சும் நற்றமிழுக் குந்தனக்குந்
தென்னெல்லை யாங்குமரி சீர்பெறுவ திந்நாடே. கச.

பஞ்சமா பாதகமும் பற்றறப்போ மென்றலகர்
தஞ்சமென்று நெஞ்சே தது சார்ந்திருப்ப திந்நாடே. கஞ.

சைவம்வளர்ந் தோங்கவந்த சங்கரருக் கேயடியார்
தெய்வமணி வாசகர்தஞ் சென்மநக ரிந்நாடே. கசு.

மதுரை கபாடபுரம் வாரிதிகொள் தென்மதுரை
கதிகாட்டு முச்சங்கங் கல்வியா ராய்தலங்கள். கள.

இறைவ ரகத்தியனு ரின்பொருள்கா ணக்கீரர்
முறையேமுச் சங்கத்தின் முன்னிடைபின் னுந்தலைவர். கஅ.

பரவுமிச் சங்கத்தைப் பல்லா யிரமாண்டாய்ப்
பரமர் கருணையினற் பாலித்தா ராதலினால். கசு.

பாடுதென் பாங்கனைய பாவினங்க ளிந்நாட்டு
மாடுமேய்க் குஞ்சிறுவர் வாயுதிப்பென் றுரறியார். உo.

கூடல் புனவாசல் குற்றூல மாப்பனூர்
ரேடகநெல் வேலி யிராமேச் சுரஞ்சுழியல். உக.

ஆடானை புத்தூ ரரன்கொடுங்குன் றம்பரன்குன்
றீடில்புவ ணங்காசி * யின்னிசைப்பாப் பெற்றதலம். உ உ.

குமரிபொதி யஞ்செந்தில் கூறுதிரு வாதவூ
ருமைபங்கர் கந்தனுறை யொப்பில்வைப் புத்தலங்கள். உ ரு.

† மங்கைப் பதியும் வளஞ்சேர் பெருந்துறையுந்
துங்கமணி வாசகர்பாச் சொன்ன தலமாகும். உ ச.

கலியெங்கு மேற்கொள்ளுங் காலம்வரி னுங்கலங்கா
நலிவுறு நல்லொழுக்க நாடுநர்வாழ் நாடிதுவே. உ டு.

கார்சிறையாஞ் சூழ்ச்சிபுகல் கார்கோளர் தம்பிரானயாற்
கார்காத்தா ரென்றிருசொல் காவாளர் நாடாள்வார். உ சு.

பள்ளர்நென் னுற்றெடுத்த பாத்தியிற்சிந் தும்பயிரைப்
பிள்ளாவிள் யாடிநட்டுப் பேணிப்பின் கொய்கதிரை. உ எ.

வனத்தெய்வஞ் சார்மரத்தில் வார்சடையாத் தொங்கலிட
வனப்பறவை தின்றுதிர்த்து மாதவர்க்கங் கூலைக்கும். உ அ.

வையைவள நாட்டை மலைக்கதலி யின்சுவைதேர்
தெய்வமுஞ் சேணினின்றுஞ் சிந்திக்கு மேநாளும். உ கூ.

ஆக்கண்ணிகள் - ஈரு.

மதுரைத் திருநகரச் சிறப்பு.

திருவளருஞ் செவ்வியுடைத் தென்பாண்டி காட்டிற்கு
மருதஞ்சூழ் மாமதுரை மன்னியகண் போல்விளங்கும். க.

---

*காளி=காளையார்கோயில். †மங்கைப்பதி=திருவுத்தரகோசமங்கை.

கத்தனைப்போ லெப்பெருக்கும் கற்பாந்த மும்மழியா
நித்யவிபூ திப்பதியாய் நிற்பதுவு மிந்நகரே. உ.

மாகைலை போலிங்கு மாவெள்ளி ரத்னம்பொன்
மேவுசபை மூன்றியற்றி வேதாக மங்களும்பின். ங.

மாதவருங் காணநட மாதேவர் செய்திடலான்
மாகைலை யொப்பன்றி மாமதுரைக் கொப்பேது. ச.

வரகுணனு மாமறையு மாசிவலோ கங்காண
வரவழைத்த தாலிதுவே மண்மேற் சிவலோகம். ஞ.

புதுநகர மாயில்வன்னி புண்ணியநீ ரன்றிமதி
மதுவாலே சுத்திசெய்த மாநகரங் கண்டதுண்டோ. ட.

அம்மைமக ளாய்த்தோன்றி யாண்டுகன்னி யாய்ப்பரமர்
தம்மைமணஞ் செய்தவர்க்கே தன்முடிசூட் டுந்நகரே எ.

சொக்கர்மூலத் தோங்குநகர் சொக்கர்மணஞ் செய்தநகர்
சொக்கரர சாண்டநகர் சொக்கர்விளை யாடுநகர். அ.

இந்தனமுங் கைவளையு மேற்றவடி வுந்தாங்கி
வந்ததிரு வீதியுடை மங்களஞ்சேர் நன்னகரே. கூ.

கன்னியும்பின் சுந்தரருங் கண்ணழலில் வந்தவரும்
அன்னைபிதா பிள்ளையர சாண்டதுவு மிந்நகரே. கூ.

கடைச்சங்க மேவியதுங் கல்வியளக் கும்பலகை
திடக்கவிஞ ரேறியதுஞ் செந்தமிழ்வா ழிந்நகரே. கக.

தமிழ்மறையை வள்ளுவனுர் சாற்றியரங் கேற்றியதும்
தமிழ்முனிவி யாகரணந் தந்ததுவு மிந்நகரே. கஉ.

சாத்தகந்தம் மூட்டக்கை தன்னையுறைக் கும்வணிக
மூர்த்திசடை பூரியக்க மும்மையா லாண்டநகர். கங.

நீலகண்ட யாழ்ப்பாணர் நின்றிசைத்த யாழ்க்கிரங்கி
ஆலமுண்டார் பொற்பலகை யன்றளித்த திங்ககரே. கச.

அரச னரசி யமைச்ச னெனுமூவர்
பரசமய கோளரியாற் பத்திமுத்தி பெற்றநகர். கடு.

தென்னன்சீர் பெற்றதன்றிச் செம்பியனுஞ் சேரர்குல
மன்னவனும் வந்து வழிபடப்பே றீந்தநகர். கசு.

பதிமகிமை கண்டதற்குப் பண்ணுமுப சாரமென
நதிகிருத மாலைப்பேர் நண்ணியிரு பாலோடும். கஎ.

சீவன்முத்தர்க் கோர்கூடல் சேர்முகிலா னற்கூடல்
மேவுகட லேழ்கூடல் மெய்க்கவியா றென்கூடல். கஅ.

மண்ணுலகர் நூல்வழியேழ் வாரிதியைக் கண்டிருப்பர்
கண்ணு லெழுகடலுங் காணலா மிந்ககரில். கக.

சதுரநெடு வீதியுடைச் சத்சா வரணஞ்சூழ்
மதுரையே பூவுலகில் மாகைலை யொத்ததுவே. உ0.

சோதியைச்சேர்ந் தொன்றிரண்டாஞ் சூழ்பிரகா ரம்மாடி
வீதிசித்தி ரைவீதி வேந்தர்வா ழாவணியே. உக.

சீர்மாசி வீதியிவை சேர்கோட்டை வீதியுடன்
ஏர்பெறுமா கைலைநிக ரேழுபிர காரமென்பர். உஉ.

கார்தவழுங் கோபுரங்கள் காணவரு வோர்பவங்கள்
நீரமுத்தி நல்குமுண்மை செப்பிக்கை தூக்கலொக்கும். உங.

காவின்மர மேலோங்கிக் காற்றிலசை சோற்றமிங்குச்
சீவன்முத்தி சேரவரச் சென்னிகொடு கூவலொக்கும். உச.

கல்குல்பக லெங்குங் கடிமுரசின் பேரொலியு
மங்கயற்கண் ணுள்திருமுன் னட்டலட்ச மிப்பொலிவும். உடு.

பன்னிருமா தத்தம்விழாப் பண்ணுதலு மீளுட்சி
முன்பணிவோர் தங்கருமம் முற்றிடுத லும்விளங்கும். உசு.

சித்திரையிற் கல்யாணஞ் சீர்வசந்தம் வைகாசி
சத்தியூ சல்லானி சாருமூலக் கொட்டாடி. உஎ.

ஆவணிமூ லம்பிட்டே ணம்மைகொலு கன்னிமதி
தேவிகோ லாடல்துலாந் தீபவிழாக் கார்த்திகையே. உஅ.

மார்கழியெண் ணெய்க்காப்பு மாமகரந் தெப்பவிழா
சீர்மாசி மண்டலநாள் சேல்வெள்ளி மன்றநடம். உகூ.

மாளிகைமேற் சென்மடவார் வான்முகிலைத் தொட்டிழுப்பார்
சாளரத்தூ டேகுமதி சன்மறுவைக் கண்டிகழ்வார். கூ0.

அரம்பைய ரேபரத்தை யண்ணல்பர மாயறங்கள்
புரியமரர் வேளாளர் பொற்கிழவோன் நல்வணிகன். கூக.

தேவேந்தே வேந்தாய்த் திசைமுகன்மா லந்தணர்ராய்
மேவியிங்குச் சென்முத்தி வீடுபெற வந்தடைந்தார். கூஉ.

சீர்த்திபெறு மாமதுரைத் தெய்வதலந் தீர்த்தமொடு
மூர்த்தி விசேடம் முறையேகே ளின்னமுசே. கூகூ.

ஆகக் கண்ணிகள் - சூஅ.

தலவிசேடம்.

ஆதார மாறின்மே லாறிருவி ரற்கப்பாற்
சோதியிலை லீதே * துவாதசாந் தத்சலமாம். க.

---

* துவாத சாந்தத்தலம்=பிரம ரந்திரத்துக்குமேல் உன்மனிச் சத்திக்கதீதமாய் விளங்கும் நிராமயஸ்தானம்.

துவாதசம்=பன்னிரண்டு, அந்தம்=முடிவு.

பாவம்போம் பேர்கேட்கப் பத்தி யொடும்வசிப்போர்
சீவன்முத்தி பெற்றிடலாற் சீவன்முத்தி மாபுரமாம். உ.

சீவன்முத்தி பெற்றோர் செயலறிதல் மிக்கரிது
பாவனையி லன்னோர் பரமன்றி வேறுகார். ங.

செம்பொருளைக் கண்டமுத்தர் செய்கடன்செய் தேதீர்வா
ரம்புயநீர் போல்வா ரறிவிலரு மற்போல்வார். ச.

விதித்ததவ மோசெட்டோ மேதினிவேந் தோபிச்சை
யெதைச்செய்தும் வாய்மனமெய் யிச்சையற நாடிநிற்பார். ஞ.

ஆரூரி லேபிறக்க வம்பலத்தைக் கண்டுதொழச்
சீர்காளத் திப்பூசை சென்றிறக்கக் காசிநகர். சு.

சேரருணை சிந்திக்கச் சேருமுத்தி மாமதுரைப்
பேர்கேட்க முத்தியின்பம் பெற்றிடலா மிம்மையிலும். எ.

கேட்கமுத்தி சீவன்முத்தி கேடில் விசேடமுத்தி
தாட்பரவ வெண்ணுது சார்பவரும் பெற்றுய்வார். அ.

இருளறவே ஞானமெலா மிப்பதியே தந்திடலாற்
பொரு * சமட்டி விச்சா புரமெனுநா மம்புனைந்தார் கூ.

எட்டெட்டாம் பீடமதி லேற்றமுறு மீஞட்சி
யட்டமூர்த் தம்விளங்கு மாதிசத்தி பீடமிதே. க0.

அப்பர்சம் பந்தர்திரு வாரூர ராளடிகள்
மெய்ப்பத்தி தொண்டுசெய்து மேவித் துதித்ததலம். ககூ.

ஆகக் கண்ணிகள் - எகூ.

---

* சமட்டி விச்சாபுரம்=எல்லா ஞானங்களையுந்தரும் நகரம்.
சமட்டி=எல்லாம். விச்சை=ஞானம்.

தீர்த்தவிசேடம்.

பூதலத்தி லாறுகடல் பொய்கைவரு முன்னழைத்த
ஆதிதடம் போக மளித்துமுத்தி யுந்தருமே. க.

பொற்கமலம் பூத்தும் புனல்வா முயிர்நீத்தும்
நக்கீர னேக்காத்தும் நன்மைதரும் பொய்கையிதே. உ.

தெரிசித்தா லேதருமந் தீண்டிடிற்செல் வஞ்சேரும்
பருகிலின்பம் மூழ்கிற் பரகதியு நல்கிடுமே. ங.

பிறந்ததின மூழ்கிற்பிறப்பில்லை வந்திமகப்
பெறலாமோ ராண்டு பிசகாது மூழ்கிலென்பர். ச.

எழுகடல்மா பாதகந்தீ ரேர்த்தீர்த்தம் வைகைநதி
பழுதருகற் பூரநீர் பண்சருவ தீர்த்தமுமே. ஞ.

கருப்பூரச் சொக்கைக் கருப்பூரத் தாலாட்டி
னெருப்பூரு பஞ்சனவே நீறும் பவங்களென்பர். ட.

புண்ணியமுன் செய்தவர்க்கிப் புண்ணியதீர்த் தம்முதவு
மண்ணலரு ளன்றி யடையார்வெம் பாதகரே. ண.

அமைநூற்று மூப்பா னறுகோடி தீர்த்தத்தை
யுமைகைலை நின்றழைத்திவ் வூரெங்குந் தாபித்தாள். த.

வாவிகிண றோடைகுள மாசருவ தீர்த்தமதாய்
மேவுகலி யின்மறைந்து வீடருளு மூழ்கினர்க்கே. ந.

சிவகங்கை வேகவதி சேர்கிருத மாலைநதி
சிவஞான தீர்த்தமெனச் செப்புவர்பேர் வையகமே. ப.

சாகா மருந்தமரர் தாம்படிந்து பெற்றதெனப்
பாகவத நூலிற் பகர்கிருத மாலையிதே. ம.

நீர்தோய்ந்த காற்றுயிரை நீத்தர்பதஞ் சேர்க்குமெனப்
பாரதநூல் மேலாய்ப் பகரு நதியிதுவே. கஉ.

ஆகக் கண்ணிகள் - கூக.

மூர்த்திவிசேடம்.

எங்குமுதிப் பிக்குமுன்னே யிங்கெழுந்த மூலலிங்கம்
அங்கமுளி பொள்ளா வழக * விடங்சரென்பர். க.

வாமமுமை யெண்ணுன்கு மாவனப்பு மேயுறலாற்
† சோமசுந்த ரப்பெயர் துதித்துரைத்தார் விண்ணோரே. உ.

பாலமுத லெட்டுப் பருவமுமே மீளுட்சி
காலமுத லெண்மூர்த்தங் காலந் தொறுங்கொள்வாள். ங.

பாலை புவனைகௌரி பண்புடைய யாமளையும்
சேலமிகு மாதங்கி சீர்பெருகு பஞ்சத்சி சு.

சோடசிமா சோடசியாஞ் சொல்லட்ட மூர்த்தத்தள்
தேடரும்பின் மூர்த்தந் திருவனந்தற் போதிலென்டர். ஙு.

அந்திதிரு வாரூரா மம்பலத்தி லேயிரவாம்
சுந்தரரை யெக்காற் றொழினும் பலனதிகம். சு.

காலையிற்பூ தானங் கடும்பகற்கோ வாயிரமா
மாலைபசுக் கோடிபரி மாமகப்பே ரூமிரவில். எ.

---

* விடங்கர்=உளிநீக்கமுள்ளவர், டங்கர்=உளி.
† சோமசுந்தரன்=உமையோடுகூடிய அழகன்.
ச+உம+சுந்தரன்=சோமசுந்தரன்.

திருவனந்தற் சேவிப்போர் செல்வமனை பேர்மகவோ
டரியகல்வி ஞான மடைந்துமுத்தி யிற்சேர்வார். அ.

அருளுருவா மங்கயற்க ணம்மையொடுஞ் சொக்கேசர்
பரவவரு வோர்வழியைப் பார்த்திருப்ப திக்காலம். கூ.

சத்தியொடு மெத்தலமும் தங்குகலை வந்திரவி
லித்திருவ னந்தலிற்சேர்ந் தின்னருள்செய் மூர்த்தியிதே. கo.

அண்டர்புகழ் பொற்கமல மாடித் திருவனந்தல்
கண்டார் சிவமாவார் காணுர் பழவினையை. கஈ.

அம்மைபக லிற்பசுவா யந்தியா சாரியராய்த்
தம்மையிர விற்சுயமாய்த் தானடைந்து பூசிப்பாள். கஉ.

மூந்துபிர தோடமிந்த மூர்த்திசாந் நிச்யமிகும்
வந்துபணி வோர்க்கு வருமிருமை யின்பமுத்தி. கஊ.

சுந்தரவி டங்கர் துவாதசாந் தப்பிரபு
வந்தபழிக் கஞ்சி மதுரா புரியீசர். கச.

கற்பூரச் சொக்கர் கடம்ப வனநாதர்
பொற்பலகை தந்தார் புழுகுநெய்ச் சொக்கேசர். கடு.

பல்லக்குச் சொக்கர்திருப் பள்ளியறைச் சொக்கரெலாம்
வல்லசித்தர் பூலோக மாசிவலோ காதிபதி. கசு.

மூலலிங்கம் கன்னிபுர மூர்த்தி யமிர்தலிங்க
மாலவாய்ச் சொக்க ரபிஷேக சுந்தரனர். சள்.

பரிமே லழகர் பரதேசி காவலனர்
பொருசமட்டி விச்சா புரநாத ரேழைபங்கர். கஅ.

நற்சிவன் முத்தீசர் நான்மாடக் கூடலுளார்
பொற்பமரும் பூவுலகிற் போற்றுகை லாசபதி. கஈ.

மூவர் துதித்தலிங்கம் மூவேந்தர் போற்றலிங்கம்
பாவ மறுத்தலிங்கம் பாவாற்பொன் னீந்தலிங்கம். உ0.

சொக்கலிங்க மீளுட்சி சுந்தரரிம் மூர்த்திச்சு
மிக்கபுகழ் காரணப்பேர் மேதினியி லின்னுமுண்டு. உக.

சொக்கேசர் செய்கருணை தொல்கடலி லும்பெரிதாஞ்
செக்கர்நேர் மேனியர்முன் செய்தவிளை யாடலைக்கேள். உஉ.

ஆதிவிளை யாட லறுபத்து நாலாட
லாதியன்பர்க் கற்புதமா மாடலுமுன் செய்யலுற்றார். உங.

இச்சரிதம் நந்தியண்ண லீசர்பாற் கேட்டுணர்ந்த
நச்சு சனற்குமாரர் நல்வியாத னுக்குரைத்தார். உச.

அம்முனிரு தற்குரைமூ வாறு புராணங்கள்
தம்மிற்காந் தத்தீச சங்கிதையிற் சொன்னதுவாம். உடு.

ஆகக் கண்ணிகள் - கநசு.

ஆதித்திருவிளையாடல்கள்

[கடம்பவனகாண்டம்]

(முற்பாகம்.)

க-வது. வேதாசமங்கள் கடம்பவனமான திருவிளையாடல்.

திருக்கைலை மீதமருந் தேவதே வன்பணியா
லுருத்திரப் பிரளயமுன் ஞெங்கி யெழுந்ததுவே. க.

அரிபிரம ரிந்திரரு மண்டரண்ட மும்மொடுங்க
வருபிரள யத்தஞ்சி வந்துவே தாகமங்கள். உ.

ஐயாகா வென்றேத்த வஞ்சேச லெனவமைத்துக்
கைலாச நாதர் கடம்பா முளைக்கவென்றார். ரு.

அந்தவரம் பெற்றமறை யாகமபு ராணங்கள்
சந்ததமும் வாழவுயிர் தந்தபதி தாள்வணங்கி. ச.

உம்மிலுதித் தும்மையறிந் தோதிநித்தி யம்பெறுவோ
மும்மாடல் கண்டுதொழ வும்மருளே வேண்டுமென. ரு.

கயிலை மகாகைலை காமர் சிவலோகம்
பயிலுமிட மன்றிநடம் பாரிலுஞ்செய் வோமவற்றுள். சு.

தென்றிசையில் நித்தியமா சீவன்முத்தி மாபுரத்தி
லன்பொடுகொந் தங்கிவிளை யாடல்பல செய்துறைவோம். எ.

சீவன்முத்தி மாபுரத்திற் சென்றுகடம் பாவுதிமின்
மூவகைய நன்னடனம் மூலலிங்க முன்புரிவோம். அ.

மாகைலை போலுமணி மன்னுபொன் வெள்ளிமன்றி
லாகுநடஞ் சேவித்தங் கார்ந்திழலைச் செய்திருமின். கூ.

ஆலயஞ்சே விக்குமுறை யாலமர்ந்தங் காளினிய
லாலயத்தா காக்குற்ற மங்கெவர்க்குஞ் செப்புமென்றார். ௪0.

நீரின்மே லேவிளங்கும் நித்யவிபூ திப்பதியைச்
சேருமென வேதங்கள் சீர்பாதம் போற்றிநின்று. ௪௪.

கந்தலுல கந்தனையுங் காணவரு நீர்ப்பெருக்கி
லெந்தவிதஞ் சீவன்முத்தி யீதலத்தைக் காண்பதென. ௪உ.

சுயம்புறையு மப்பதிதான் சூழவிரு யோசனைதீ
மயஞ்சேர் மதிலோங்க மத்தியினீர் மேன்மிதந்து. ௪ரு.

சோதிநிறை தம்பமதாய்த் தோன்றுமெனக் கேட்டுவந்து
பாதகரை. யுஞ்சிவமாப் பண்ணுதலங் கண்டனவே. ௪சு.

இதுவோ வழியாத வேர்சிவன் மூந்திபுர •
மிதுவோ முளைத்தோங்கு மீசனெனப் போற்றினவே. கடு.

அரன்றரும தேவதையை யான்விடையாக் காத்ததொப்ப
மரங்கிளையாய் வேதங்கள் வாழ்ந்துய்யச் செய்திடலால். கசு.

கண்ணுதலெச் சூழக் கடம்பா மூளைத்தஞ்சேற்
கண்ணியைச்சூழ் வில்வங் கவிந்துமலர் தூவியதே. கள.

மறைவிருக்க மாகமங்கள் மன்னுகொடி பூவதிலே
யுறையு மிதிகாச மோங்குபுரா ணங்களியாம். கஅ.

நண்ணியமஞ் செய்துசொக்கை நாளுமருச் சித்தேத்தி
யன்னியரு ஞான மடையவழி காட்டினவே. கக.

காற்றடிக்கப் பூச்சிதறிக் கப்புகள்தாழ்ந் தேர்தோற்றம்
போற்றிவிண்டு முன்காணப் போதின்மலர் தூவலொக்கும் உ0.

பூம்கொம் பசைதோற்றம் புவனவிட்டில் போல்வீழா
தீங்கையுரு தார்மி னெனவழைத்த வாறொக்கும். உக.

ஆகக் கண்ணிகள் - கஙஎ.

உ-வது. வேதாகமங்களுக்கு வரங்கொடுத்த திருவிளையாடல்.

அடரருத்ர சங்காரத் தண்ணலரு ளான்மறைகள்
கடம்புருவ மாகிக் கதிபெற்றுப் பத்திகொண்டு. க.

ஈசர் திருநடன மெங்ஙனோ வென்றுதினம்
பூசை புரிந்தேத்திப் பூரணரைப் போற்றிடலும். உ.

சிவலிங்கந் தன்னினின்று தேவியொடும் வந்தருளத்
தவமறைகள் போற்றியெங்கள் தாபமற வோர்தீர்த்தம். ங.

தந்தருள வேண்டுமெனத் தம்முன் குரோசத்துட்
சிந்தைமகிழ்ந் தீந்து சிவதீர்த்த மாமிதனை. ச.

தரிசிக்க வுண்ணத் தலைமேற் புரோக்ஷிக்கப்
பெரும்பிணிகள் பாவங்கள் பேரு மெனமொழிந்தார். ரு.

வேதங்க ளப்போது வேண்டச் செகமுதிக்கு
மாதிரைநா ளிற்கடம்பி லாடல்புரி வோமென்றார். சு.

கனகமன்றின் மாகயிலை காந்திமணிச் சிங்கார
மனவரதத் தாண்டவம்பின் ஞகுழென்றார் வெள்ளிமன்றில். எ.

கடம்படியிற் செய்ந்நீடனங் கண்டோர் கதிபெறவுங்
கடம்பவனப் பேர்பெறவுங் கண்ணுதலீர் சார்வரமே. அ.

ஆகக் கண்ணிகள் - கசரு.

ரு-வது. கடம்பவனத்தில் நடம்புரிந்த திருவிளையாடல்.

எண்ணருங்கா லம்மறைக ளேத்தித் தவம்புரிய
நண்ணுபெரு நீர்வடிந்து நாதர் திருவருளால். க.

தம்பிலிச்சா சத்தியுமச் சத்திபால் மாலயனுஞ்
செம்மையுற வந்துசகஞ் சீராகத் தோன்றியதே. உ.

ஓடுங்கியவை தோன்று முதையகா லம்யாரும்
நடங்காணச் சொக்கேசர் ஞானக்கண் ணீந்தனரே. ரு.

மார்கழியி லாதிரைநாள் மாகைலா சக்கூத்தைச்
சிர்பெறவே பூங்கடம்பிற் செய்ய வருள்கூர்ந்து. சு.

அண்ணல் சிலம்பதிர வம்பொற் பதந்தூக்க
மண்ணகக்க முற்றிடலான் மாகைலை யிங்கழைத்தார். ரு.

தென்னுடு செய்தவத்தாற் சீவன்முத்தி மாபுரத்தின்
மன்னுபுகழ் மாகைலை வந்தே யிருந்ததம்மா. சு.

மாகைலை மீதிற்பொன் மன்றமைத்துக் கூத்திசைக்க
வோகையுடன் வேதங்க ளொள்விழியாற் கண்டனவே. எ.

சிவலோக முங்கடம்பிற் சேரவழைத் தன்பரது
பவமொழிசிங் காரநடம் பண்ணினர் ரத்னமன்றில். அ.

சிங்காரக் கூத்தையர் செய்யவரி யாதனத்தி
லங்கயற்கண் ணம்மை யருகிருந்து கண்டனளே. கூ.

பொன்மன்றம் நேர்வடக்குப் போற்றிரத்ன மீசானம்
பின்னடித்த வெள்ளிமன்றம் பிஞ்ஞகர்க்கு முன்கிழக்கே. கo.

கடம்பிடையே சொக்கர்மா கைலைசிவ லோகம்வர
நடம்புரிந்த தாலிதற்கு நாட்டினரங் நாமம். கக.

பூவிற் சிவலோகம் பூலோக மாகைலை
மேவுமிரு காரணப்பேர் மேதினியி லேவழங்கும். கஉ.

அயன்பூசை செய்தா ரரிவரம்பெற் றூர்நாலெண்
செயற்கரிய நல்லறங்கள் தேவிவளர்த் தாள்கடம்பில். கசு.

ஆசுக் கண்ணிகள் - கருஅ.

ச-வது. மகாகைலைமான்மியம் உரைத்த திருவிளையாடல்.

தொல்புவனந் தோறுந் தொடுகடல்சூழ் தீவுதொறுந்
தொல்கைலை யுண்டதிலே சோதியுமை யோடுறையும். க.

அண்ணலுலகம் வைகுந்த மங்கங்கே யுண்டெனினுஞ்
சுயஞ்சுவேத தீவிலரி தங்குவர்பா லாழியிடை. உ.

பிரமலோ கங்களுள்ளே பேசுசத்ய லோகமதிற்
பரம னெனும்பிரமன் பண்புபெற வீற்றிருப்பார். ௬.

அனுகதமே யாதார மாறுள்ளு மிக்கதபோ
லனுதி சதாசிவனுர்க் கானதல மாகையலை. ௭.

மாகையலை மேரு வடகீழ்த் திசையினின்று
சாகரஞ்சூழ் தீவேழுஞ் சக்ரகிரி யுங்கடந்து. ௮.

சூரியனுஞ் சந்திரனுந் தோன்றுப் புறக்கடல்போய்ப்
பேரிருளிற் றன்னெளியே பெற்றண்ட மொட்டிநிற்கும். ௯.

மேரு நடுவினின்று மேவுமண் டச்சுவர்தா
னேரைம்பான் கோடியெனு மோசனைது ரத்துளதாம். ௧௦.

ஆழிவரை யின்வடக்கே யாறிரண்டோர் கோடிசென்று
சூழுமலர்க் காநடுவே சோதியுட னண்டத்தின். ௧௧.

ஈசான முத்தரமா மிந்தத் திசைக்கிடையே
தூசுறுநாற் பான்கோடி சுற்றளவா மாகையலை. ௧௨.

கூர்மபதம் வேர்கடந்து கோளகைமே ளெமெனச்
சேரு முடிதான் சிவலோகம் பெற்றிருக்கும். ௧௩.

அக்கையலை யீசர்வடி வாமாகி லக்கிரியின்
மிக்கபுகழ் சொல்லுதற்கு வேதாவு நாச்சலிப்பர். ௧௪.

வெள்ளிபொன் ரத்னம் விளங்குபடி கஞ்சோமன்
தெள்ளரிகாந் தந்தழனேர் சிகரங்கள் கோடியுண்டு. ௧௫.

ஏழு மதிலு மெழுநான்கு வாசல்களு
மேழா வரணஞ்சூ ழேழுவகைக் காவலுமாம். ௧௬.

மதிலுயர்பைம் பாளிலக்கம் வாசலுயர் பொன்றிரண்டென்
றதின்முறை மூன்றுநான் கைந்தாறே ழாமிலக்கம். ௧௭.

ஆயிரந்தே வாண்டி லடைசுவர்க்க போகம்சுவி
சாயுமுன மங்கிருக்குஞ் சாரூபர் பெற்றிடுவர். கடு.

சனகாதி யோகியருஞ் சாரூபம் பெற்றவரும்
தனிமுதலைச் சிந்தித்துத் தாமுறைவார் வாசலுறும். கசு.

கந்த னுலகுங் கணபதிதன் பேருலகு
மூந்துபரா சத்தி முதலுலகு மங்குறுமாம். கள.

உள்ளா வரணமைந்தி லொன்றுமுதற் சத்திவிடை
கள்ளமிலாச் சண்டேசர் காக்குநந்தி தாமுறைவார். சஅ.

சிங்கா தனமீது செய்யதுவர் வாயருட்க
ணங்குசபா சம்விளங்க வாதிசத்தி வீற்றிருப்பாள். கக.

உடையா ளிவளென்னு மூளளத்தார் புண்யரிவள்
கடைக்கணரு ளானடக்குங் கஞ்சன்மால் ருத்ரர்தொழில். உ0.

நவரத்ன பீடமதி லற்பா னிலக்கமுயர்
புவனமெலா மீன்றாளப் போற்றியன்ப ருட்செல்வர். உக.

ஒள்ளியவைம் பானிலக்க மோங்கி யறத்துருவாம்
வெள்ளிவரை போலும் விடைக்கடவுள் வீற்றிருப்பார். உஉ.

விடைக்கடவுள் பாசம் விழுந்திறைஞ்சி யண்டரெல்லாம்
விடைபெற்றுப் பத்தி விநயமொடு மூட்செல்வர். உங.

பரவுசிவ காரியங்கள் பண்ணுமடி யார்க்குவரந்
தருகருணை மூர்த்தியெனுஞ் சண்டேசர் தம்மூலகாம். உச.

உள்ளா வரணத்தி லுள்ளன்பே மேனிகொண்டு
வள்ளல் கருணைபெறு மாதவத்தோர் தாமுறைவார். உடு.

நாரணரு மிந்திரரு நான்முகரு நற்றவரும்
காரணனைச் சிந்தித்துக் கன்மமல மற்றிருப்பார். உசு

பிரளயங்கள் கற்பங்கள் பெற்றதொகை யாயிரமும்
வருமையுந் தேரா மகான்க ளிவர்களென்பர். ௨௭.

சிவராச தானியெனச் செப்பா வரணத்திற்
சிவகணங்கள் போற்றச் சிவனேமற வாதவராய். ௨௮.

நந்தீசர் பொற்பிரம்பு நல்லருண்மு கம்விளங்க
விந்தீசன் போன்மழுமா னேந்திநித்யம் பெற்றிருப்பர். ௨௯.

சண்டேசர் நந்தீசர் தம்மலுக்ளை யானீல
கண்டர்பதம் போற்றிக் கதிபெறுவார் மெய்யன்பர். ௩0

ஐந்தாழுள் ளாவரண மம்மைசிவ நந்தியன்றி
பைந்துளவன் சேடனின்றும் பாராத வாடரங்காம் ௩௧.

நாற்கோடி யோசனையா நாதருறை யவ்வரங்கி
னுற்றுறஞ்சிந் தாமணிசேர் நந்தா வனத்துடே. ௩௨.

ஆதியருள் போலு மமிர்தவோ டைக்கரையி
னுதவடி வாமூன்று ஞானசபை மேவிடுமாம். ௩௩.

சிவபெருமா னச்சபையிற் சேருஞ் சதாசிவக்கூத்
துவந்துமையாள் கண்டுமகிழ் வுற்றிடச்செய் வார்நெடுநாள். ௩௪.

அந்தநடங் காண வருந்தவஞ்செய் மான்முதலோர்
வந்துதெரி சிக்கவுளம் வைத்திந்தார் ஞானக்கண். ௩௫.

ஒன்றரைக் கோடி யுயர்ந்தகன்ற பொற்சபையி
லொன்றுமிலா கோடியரை யுற்றதிரு மேனிகொண்டு. ௩௬.

அரிமத் தளமுழக்க வன்பினய னுத்திசைக்கப்
பரிகம்பன் சங்கூதப் பாணன் முழவதிர்ப்ப. ௩௭.

நந்தீசர் பொற்பிரம்பா னற்சபையி னுர்ப்படக்கிப்
பந்தமொழிக் கும்பரமர் பாதகட்டி யங்கூற. ௩௮

வேழமுகன் கந்தன் விசயைசயை யும்மருகே
சூழவுமை புன்முறுவல் தோன்றமகிழ் வுற்றிருக்க. ரூக.

தாந்தாம் பிரமமென்பார் தங்கள் செருக்கடங்கத்
தோந்தத்தா மென்றகுறி தோன்றநடஞ் செய்யலுற்றார். ச0.

விண்ணேர்சித் தர்முனிவர் விஞ்சையரு மெய்ஞ்ஞானக்
கண்ணுரை நன்னடனங் கண்டடைந்தா ரானந்தம். சக.

இந்நடனத் தேனுண் டியாரும் திருத்தியுற்றார்
பொன்மழையி ரத்னமழை பூமழைபொ ழிந்தனவே. சஉ.

பற்றற்றார் குஞ்சிதத்தாள் பற்றியுமெய் யன்பர்வினை
பற்றறவே செய்யவுளம் பற்றுஞ ரக்காலே. சங.

அநேகமா லிந்த்ர ரநேகர்பிர மர்முனிவ
ரநேகசித்தர் யோக ரநேகர்மற் றொன்றுஞர். சஜ.

பெருங்கைலை யோடிறையின் பேருருவைச் சிந்திப்போர்
ரிருமைதுய்த் தங்குநித்த வின்பமுத்தி பெற்றிடுவார். சடு.

அன்பர்தொழ வவ்வுருவ மானர் சுயேச்சையுறின்
மன்னுமொரு ரோமத்தில் வந்தொடுங்கு மண்டமெலாம். சசு.

மாகைலை முச்சபைகள் மாநடன மூர்த்தியிவை
மாகடம்பிற் சூக்குமமாய் வந்திடச்செய் தார்சொக்கர். சஎ.

அக்கைலை யிங்குநக ராக வதினடஞ்செய்
சொக்கர்புக ழுந்நகரத் தொல்புகழுஞ் சொல்லரிதே. சஅ.

தூரத்தே கண்டுசபைத் தூவிதொழு தாற்பவம்போம்
பாரகுஞ்சி தப்படாதம் பாடுநர்த்தம் பேறெளிதோ. சகூ.

ஆதிரைமா தப்பிறப்போ டாடிடப பூரணைகள்
சோதிபிர தோடதினஞ் சோமனுட் காணமுத்தி. நு0.

ஆசக் கண்ணிகள் - உ0அ.

ரு-வது. தேவியறம்வளர்த்த திருவிளையாடல்.

சோமன் ரவிமுதலாய்த் தோன்றியதெவ் வாறென்று
வாமி யுமைவினவ மாகைலே மேலமரும். க.

நாதர்தங் கண்ணில்வந்து நாளவரிலொ டுங்குமென
வாதிபக வன்விழியை யங்கையால் மூடினளே. உ.

அக்கணத்துக் குள்ளே யநேகயுக மாயுலகின்
மிக்கவிருண் மூடியெங்கு மெய்த்தவம்யா ரும்மிழந்தார். ரு.

அப்போ துமையீச ரம்பொற் பதம்போற்றி
யிப்பாவந் தீர வெனக்கருள வேண்டுமென. சு.

எத்தலத்துந் தீராத விப்பவத்தை நீசிவன்
முத்திபுரஞ் சென்றங்கு முப்பா னிரண்டறமும். ஙி.

பத்தியொடு செய்துநம்மைப் பண்பாய் வழிபடப்போம்
புத்தி யுனக்கிதுவாம் போவென்றார் மாதேவர். சு.

விசயைசயை சண்டிமுதன் மெல்லியர்தற் சூழ்ந்துவரத்
திசைவிளங்கு தீர்த்தகன்னி தேவர்முனி வோர்களொடும். எ.

காசிகா ளத்திமுதற் கண்டகம்பை சூழ்காஞ்சி
வாசரைமுன் போற்பணிந்து வந்தாள் கடம்பிடையே. அ.

கடம்படிவாழ் கற்பகத்தைக் காலால் வலம்வந்து
தடமலரா லர்ச்சித்துத் தாழ்ந்துகயற் கண்ணுமைமுன். கூ.

சென்றுசை யாற்பணிந்திச் செல்விகலை யாயிரத்தி
லொன்றேநற் கைலையுறு முண்மைசே டிக்குரைத்தாள். கo.

அங்கவன்முன் னிலெண் ணறத்தையுஞ் செய்யுமெனச்
சங்கையற வன்னமுதற் றந்திடுமோர் சட்டவமும். கக.

இறைவர்முன் னீந்த விருநாழி நெல்லினையுங்
குறைவறவே தந்தருளுங் கூர்ந்தாளச் சேடியர்க்கு. கஉ.

கலம்பெறவே சேடியர்க ணுலெண் ணறம்வளர்க்க
நலமுற்றுன் பாவமற்று ணல்லருள்பெற் றுளுமையும். கங.

மலர்மாரி பொன்மாரி மாமணியின் மாரிபெய்யப்
பலதேவ துந்துபிகள் பல்லோர் முழக்கலுற்றார். கச.

மாதவர்பத் தாயிரரு மாமுனிமூ வாயிரரும்
வேத விருடியரு மேவியடி போற்றிநின்று. கரு.

சந்ததமு மிங்கதிக சாந்நித்யம் பெற்றடியோஞ்
சுந்தரரோ டும்மைத் துதிக்கவரம் வேண்டுமென. கசு.

காசி விசுவேசன் கச்சியே கம்பனெளி
வீசுகை லக்கிறையு மேவுமிச் சுந்தரனே. கள.

விசாலாட்சி காமாட்சி மேவுகை லப்பரையும்
விசாரணையோர் போற்றுமிந்த மீனுட்சி யேயதனல். கஅ.

இச்சமட்டி விச்சா வெழினகர மெத்தலத்து
மெய்ச்சும் விசேடமென வேண்டும்வரந் தந்தருளி. கசு.

இத்தலத்தோ டெம்பெருமை யாரறிவா ரெம்புகழைப்
பத்திமிகு சைவரன்றிப் பாடண்டி கட்குரையீர். உ0.

என்றுகயற் கண்ணி யெழிலுருவி லொன்றுகி
யின்றுமெண் ணுன்கறமு மிங்கருளோ டேவளர்ப்பாள். உச.

ஆக்கி கண்ணிகள் - உஉகூ.

சூ-வது. திருமால் வரம்பெற்ற திருவிளையாடல்.

வாணனந்தி போல்விண்டு மத்தளமு ழக்குதற்குச்
சேணுயரும் பூங்கடம்பிற் செய்ததவஞ் சொல்லலுற்றார். க.

பரனிடமிச் சாசத்தி பாகமுற்ற வந்நாளே
திருமாலுஞ் சத்தியுடன் சேர்ந்துதித்தார் பின்னமின்றி. உ.

அரன்பா லுமையவடா னக்கினியிற் சூடதுபோற்
பிரிவறலான் மாலரர்க்குப் பேதமுரை யார்பெரியோர். ஊ.

கண்ணே மலராய்முக் கண்ணன் றிருவடியின்
கண்ணே யருச்சித்துக் கண்ணன்மூன் னேமிபெற்றான். ச.

அளவிறந்த மால்சிரங்க ளாரமாய்த் தாங்கோத்தே
யளவிறந்த வன்பா லணிவார் பிறந்திறவார். டு.

இச்சகைய மானெடுநா ளிங்கியற்று பூசையொடு
மெய்த்தவத்தைக் கண்டுசொக்கர் வேண்டுவரங் கேளென்ன. சு.

உமையாமென் றங்கை *யுபகேசிப் பேர்பெறவு
முமையிங்கு மீளுட்சி யொப்பின்மணஞ் செய்போது. எ.

வரிசைநான் செய்திடவு மன்னுகடம் பில்லெனக்குப்
பிரதிட்டை பூசை பிரபலமாய்ச் செய்திடவும். அ.

சோதி திருநடத்திற் றூய்மத் தளமுழக்கி
யாதியுமக் கன்புடைய னுகவும் வேண்டுமென. கூ.

வரமனைத்துந் தந்தோ மகாகைலை மன்றமிதிற்
பரிசுத்த மத்தளத்தைப் பண்பாய் முழக்கிடுவாய். ஈ0.

என்றுசொக்கர் மாலுக் கிசைத்தபடி யேகடம்பி
னன்றவரம் பெற்று நடவு ரெனும்பதியில். ஈச.

---

*உபகேசி=கேசிக்குப்பின்பிறந்தவள். கேசி=திருமால்.

நாடியரன் பூசித்த நன்மைதரு வார்க்கருகே
கூட லழகரெனக் கோகனகை யோடமர்வார். கஉ.

ஆகக் கண்ணிகள் - உசக.

எ-வது. அயன்பாவந்தீர்த்த திருவிளையாடல்.

தாந்தாம் பிரமமெனத் தம்முண் மயங்கிமுனம்
பூந்தா மரையோன்மால் போர்புரிந்தா ரக்காலே. க.
அங்கெழுதம் பத்தி னடிமுடியைக் காண்பவரே
தங்கும் பெரியரெனத் தாம்போனர் கீழ்மேலும். உ.
அடிகாணப் பன்றியா யாயிரந்தே வாண்டளவும்
படியகழ்ந்து மாயோன் பரனருளான் மீண்டுவந்தான். ங.
அன்னமாய்ச் சென்றவய னம்முடிகா ணுதழன்று
முன்னலெத் தூரமென முன்வரும்யோ கர்மொழிவார். ச.
அரனருள்யாம் பெற்றிறங்கி யாகு மனந்தகற்பந்
திருமுடிநீ யோகாண்பாய் செல்லாய் திரும்பென்றூர். ஞ.
ஈசன் முடியினின்று மெண்ணறுங்கா லம்வருமோர்
வாசமலர்த் தாழையுடன் மண்மீதில் வந்தவயன். ட.
கண்டேன் முடியையெனக் கைதையுமா மென்றிடலும்
விண்டுகேட் டுங்களுரை மெய்யல்ல வென்றுரைக்க. ண.
உந்திபூத் தோனையய னுன்னையுமவ் வீசனையுந்
தந்தவன்யா னென்றுவசை தந்தான் பிறப்பிலிக்கும். அ.
சோதியாய் நின்றதம்பஞ் சொன்னவுட னேவெடிக்க
வாதினைக் கண்டா னயனடுங்கக் *கஞ்சுகனால். கூ.

---

* கஞ்சுகன் = வயிரவக்கடவுள்.

ஏசுமுகங் கிள்ளுண்ண வின்றுமுதல் வேதனுக்குப்
பூசையு மில்லயமும் போகவென்றூர் மாதேவர். கo.

தம்முடியி னின்றிறங்குந் தாழைமலர் பொய்யுரைக்கச்
செம்மையிலாய் நாமுன்னைத் தீண்டோ மெனத்தவிர்த்தார். கக.

அகந்தைபொடு பொய்யுரைத்த வைந்துமுக வேதனுக்கோர்
முகமொழிந்த பின்னுன் முகமென்னும்பே ரானதுவே. கஉ.

பொய்யுரைத்த வேதனிங்குப் புண்பட்ட பாட்டையுன்னின்
மெய்ம்மனம்வா யாற்பாவ மிக்கசெய்வார்க் கெக்கதியாம். கஙு.

சிவநிந்தை செய்துபொய்யுஞ் செப்பிய சிவத்ரோகஞ்
சிவனருள்பெற் றுலன்றித் தீரா தெனுமறிவால். கச.

பத்தா யிரமாண்டு பங்கயன்ற வம்புரியக்
கத்தர்வெளி வந்து கடம்பினமைப் பூசியென்றூர். கஞ.

நற்ரு மரைக்கிழவ னண்ணியிங்கு நூருண்டு
பொற்ரு மரையாடிப் பூசித்தான் சொக்கர்பதம். கசு.

வையைநதி யின்வடபான் மற்றிருரு நூ ருண்டுசிவப்
பொய்கையி னீராடிப் பூசை தவம்புரிய. கஎ.

சுந்தரர்நேர் தோன்றித் தொலைத்தோம் பவமனைத்து
மந்தணர்க்காம் பூசை யனைத்துமுனக் காகுமது. கஅ.

திருநடத்திற் கேற்பத் திருத்தாள வொத்திசைத்துப்
பிரமதா ளப்பேரும் பெறுவாய் சிருட்டியென்றூர். கஙு.

பரன்கடம்பிற் செய்நடத்திற் பங்கயன்ரு ளம்புடைத்துப்
பிரமதா ளம்மெனுமோர் பேர்வழங்க வாழலுற்றூர். உo.

அரவணிந்தா ராப்புடையா ரன்னவிநோ தப்பெருமான்
பிரமனு ரேத்தப் பிரமேச ராய்த்தழைத்தார். உக.

குரவங் கமழ்குழலாள் கூறர்திரு வாப்புடைய
பிரமே சரைப்போற்றப் பேசும்பொய் பாதகம்போம். உஉ.

ஆசுக் கண்ணிகள் - உசுஊ.

அ-வது மலையரசன் மலயத்துவசனன திருவிளையாடல்.

இமயமலை யாளு மிமவான் மனைவியொடு
முமைபங்கர் தம்மடியை யுள்ளுறத்தி யானிச்சான். க.

அங்கமருங் கேதார ராலயம்பூ சிக்கவந்த
பொங்குதிரு வாசர்தமைப் போற்றுத வவ்வரசை. உ.

மானுடமாச் சென்றுதிக்க மாமுனிவர் தாஞ்சபிக்க
மேனையொடும் பாதம் விழக்கருணை கூர்ந்துரைப்பார். ஊ.

தென்பாண்டி யாளுஞ் சிவபத்தி யிற்சிறந்த
மன்னன் மணவூர் வழுதிமக ளப்பிறப்பாய். ச.

வளவனுக்கு மேனை மகளாய்ப் பிறக்கவந்த
விளமயிலை நீமணந்தங் கின்புறச்செங் கோல்புரிவாய். ஙு.

சிவனருளா லுங்களுக்குத் தேவியே பெண்ணுவா
ளவளை மணந்திறைவ ராள்வார் முடிதரித்து. சு.

பத்தினியு நீயும் பலவிகபோ கந்துகர்ந்து
முத்தியிலே சேர மொழிந்தார் தவசிலர். எ.

முனிமொழிந்து கேதார மூர்த்திபதம் பூசித்தார்
புனிவரையை யாளும் பருவதரா சன்புவியில். அ.

மலய மெனும்பொதிகை வாழ்முனிவர் தாள்போற்றுங்
குலசே சரற்குக் குழந்தையாய்த் தோன்றினனே. கூ.

குலசே கரன்றன் குமரனெடுங் சேவியொடு
மலயமுனி பாலடைந்து மன்னுகிரி யைங்கடத்தி. ச0.

மலயமலை நீள்துவச மாயிலங்குங் காட்சியினன்
மலயத் துவசனென வைத்தான் றிருநாமம். கக.

சோழனுக்கு மேனையுந் தோன்றிளள் புத்திரியாய்
வாழும் வளவன்பொன் மாலையென நாமமிட்டான். கஉ.

மணலூரான் மாறன் மலயத் துவசனுக்கு
மணம்பேசிச் சோழன் மகளிரவி வண்குலத்து. கங.

பொன்மாலை தன்னைமணம் பூட்டிமுடி சூட்டியுயர்
தன்மாலை யாம்வேப்பந் தார்மாலை யுந்தரித்தார். கச.

ஆகக் கண்ணிகள் - உஎஎ.

அறுபத்து நான்கு திருவிளையாடல்கள்.

[கடம்பவன காண்டம்]

(பிற்பாகம்.)

க-வது. இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடல்.

முன்ற முதலுகத்தின் மொய்குழலா ரின்னடங்காண்
பொன்னுலக விந்திரன்பாற் பொன்னன்போய் வீற்றிருந்தான். க.

விண்ணிறைவன் றன்குருவை வெல்லியராட் டால்வணங்கான்
பெண்மயன்மேற் கொண்டாரைப் பேரறிவு நீங்குமன்றே. உ.

வியாழனுட னுக்கம் விடவிருத்தி ராசுரனை
நியாயப்போர் செய்யாது நீள்கடலுட் போய்க்கொன்றான். ங.

குருவைமதி யாதசுரற் கொன்றபழி மேற்கொளலு
மிரும்பதவி விட்டிங்ங னிந்திரன்முன் வந்தடைந்தான். ச.

கடம்பவனப் பேரெல்லை கண்டுபுகக் கொன்றபழி
விடவதுவே ருநிலையான் மிக்கமகிழ்ந் தாசானுல். நி.

ஆதிதட மும்மருகி லார்கடம்பி னீழலிலே
சோதிவடி வாய்முளைத்த சுந்தரரு மாய்விளங்க. சு

கண்டான்முன் ருன்பெற்ற கண்ணு யிரங்குளிரக்
கொண்டான்பே ரானந்தங் கும்பிட்டா னேத்துதலும். எ.

பொன்னுலகிற் செய்பழியும் பூவுலகிற் போக்கவிங்கு
மன்னுதடம் பொற்ரு மரைமலரச் செய்தனரே. அ.

பொற்ரு மரையாடிப் பூதிகண்டி மேற்பூண்டு
நற்ரு மரைப்பாத நண்ணியுளம் பூண்டனனே. கூ.

பத்தியொடு பூசித்துப் பண்புவிமா னஞ்சேர்க்கச்
சித்திரைதோ றும்வந்து செய்பூசை யென்றுரைத்தார். கo.

எட்டுக் கயங்களுரா லெண்சிங்க மூங்கணங்க
ளெட்டெட்டுந் தாங்குவதே யிந்த்ரவிமா னப்பெருமை. கக.

எல்லைபுகத் தொட்டபழி யிந்திரனை விட்டகற்ற
வல்லார்நம் வெம்பிணியை மாற்றிடவும் வல்லாரே. கஉ.

ஆசுக் கண்ணிகள் - உஅகூ.

உ-வது வெள்ளையானை சாபந்தீர்த்த திருவிளையாடல்.

காசிசென்று பூசித்துக் கையேற்ற தாமரையை
யாசியொடு மீயவிந்த்ர ஞனைமேல் வாங்கிவைததான். க.

அஞ்சா மதம்பிடித்த வைரா வதமந்தக்
கஞ்சமலர்க் கீழ்வீழ்த்திக் காலாற் சிதைத்ததுவே. உ.

கண்டதுரு வாசமுனி கண்சிவந்து புன்செருக்கைக்
கொண்டவுன் சென்னிதென்னர் கோன்வளையாற் போகவுன்றான்.

கோட்டொருநால் வெண்ணிறத்துக் குஞ்சரமுஞ் சீரிழந்து
காட்டானை யாகக் கடுஞ்சாப மிட்டாரே. ச.

பனிமொழியாள் பங்கர்திருப் பாத முளமிருக்க
முனிமொழியு மீசர் மொழியுமினி வேறுமோ. ஙி.

சாபவிடை தாருமெனத் தாழ்ந்தடியில் வீழ்ந்திறைஞ்சக்
கோபஞ் சிறிதமர்ந்து கூறலுற்றார் மாமுனிவர். சூ.

மாலயனு நீயு மனங்கொளிறு மாப்பெல்லா
மாலமுண்டா ரைப்பூசை யாற்றியபே றென்றறியாய். எ.

சிவசேட நிந்தனைக்குத் தீர்பரிகா ரம்மில்லை
யவதிமுடி மட்டாகு மானை நூ ருண்டலையும். அ.

என்றபடி வேழமலைந் திக்கடம்பில் வந்துசொக்கைப்
பொன்முளரி நீராட்டிப் பூப்பறித்திட் டேத்தியதே. கூ.

இந்த்ரன் பழிதொலைத்தே மீடேற்றுஞ் சொக்கேசர்
வந்திறைஞ்சும் வேழத்தின் மாசாப முந்தீர்த்தார். கூ.

துருவாசர் சாபந் தொலைக்கச் சிவலிங்கப்
பெருமானே யன்பாற் பிரதிட்டை செய்ததுவே. கக.

அந்தவிதந் தாபித்த வைராவ தேச்சுரரு
மிந்திரப்பே ரீச்சுரரு மெவ்வினையுந் தீர்த்தருள்வார். கஉ.

ஆகக் கண்ணிகள் - ரூ0க.

[மதுரைக்காண்டம்]

கூ-வது. திருநகரங்கண்ட திருவிளையாடல்.

வாலை ரிரவின்முன் னுள் வந்துகடம் பில்வணங்குந்
தானையுஞ் சொக்கைத் தனஞ்சயன்கண் டான்முதலில். க.

நலஞ்சேர் கடம்பவன நாடு நகராக்கக்
குலசேக ரன்கனவிற் கூறமண வூரடைந்தார். உ.

தனஞ்சயன்பாற் கேட்டதுவுந் தன்கனவுந் தேர்ந்துதென்னன்
வனந்திருத்து மள்ளரொடும் வந்தான் கடம்பிடையே. கூ.

இந்திரவி மானமுறை யிந்துசேக ரச்சோம
சுந்தரரைக் கண்டு தொழுதான் தமிழ்நாடன். ச.

சித்தராய் முன்வந்து சிற்பமுறை யேகோயில்
சுற்றுமதில் கோபுரமுஞ் சூழ்ந்தருஞ் செய்கவென்றார். ஞ.

புதுநகர மானபின்பு புண்ணியர்தாஞ் சூடுமதி
மதுவாலே சுத்திசெய்து மாமதுரை யென்றழைத்தார். சு.

ஆகக் கண்ணிகள் - கூ0எ.

ச-வது. தடாதகைப்பிராட்டியார் திருவவதாரத் திருவிளையாடல்.



சூலசே கரன்பாற்செங் கோல்வாங்கி நாடாளு
மலைத்துவசன் சொக்கர் மலரடியைப் போற்றிவந்தான். க.

நன்று மலைத்துவச னன்மைதரும் புத்திரற்கா
வொன்றொழிய நூறு முபர்பரிமே தம்புரிந்து. உ.

புத்திரகா மேட்டிமகம் போற்றிப்பின் செய்யவதிற்
புத்திரியாய் மீளுட்சி பொங்குமகத் தீயிடையே. ந.

மூன்று தனத்தோடு மூன்றுபரு வத்தோடுந்
தோன்றி மலைத்துவசன் றூயமக ளாகவந்தாள். ச.

விடாதடியின் மூன்பாடும் விச்சா வதிக்கிரங்கித்
தடாதகையாப் பொன்மாலை தன்மடியில் வீற்றிருந்தாள். டு.

மேனை யுருவாயும் விச்சா வதியாயுந்
தான்பணிபொன் மாலை தடாதகைக்குத் தாயாஞள். சு.

அரிய மகத்துதித்த வம்மைசன மூன்றுடனே
வருதல்குறை யென்று மலைத்துவசன் றுன்வருந்த. எ.

மைந்தர்களைப் போலுன் மகளைமுடி சூட்டிவாய்
பைந்தொடியோர் கொங்கை பதிமுன் மறையுமென. அ.

விண்ணெழுந்த மெய்வாக்கை மீனவன்கேட் டோகையுடன்
பெண்ணை முடிசூட்டிப் பேரரசு நல்கினனே. கூ.

கற்றமறை யோருங் கலைஞர்துறந் தோர்சுமதி
தற்போத மாண்டாருந் தாஞ்சூழ்சிங் காதனத்தில். கo.

கதிர்மகுடம் வேம்பு கயற்கொடிசெங் கோல்விளங்க
மதிகுலத்துக் கன்னிகையாய் மாமதுரை யாண்டாளே. கக.

ஆகக் கண்ணிகள் - ஈகஅ.

ரு-வது திருமணஞ்செய்த திருவிளையாடல்.

திக்கெல்லாம் வென்று திருக்கைலை சென்றெதிர்ப்ப
முக்கண்ணர் நோக்கிடலு முத்தனமி ரண்டாஞள். க.

பையவிழி கீழிறங்கப் பாதநில மேற்கிளக்கத்
தையஞ ணேறத் தனுநா ணிறக்கிநின்ரூள். உ.

தூயசொன்முன் கேட்டிருந்த தொல்சுமதி தான்வணங்கித்
தாயேயிக் கொன்றையணி சங்கரனே நின்பதியாம். ங.

என்றுசொல்ல நாத ரிளமயிலை நோக்கியெழிற்
புன்முறுவ லோடும் புகல்வாரின் சொல்விளங்க. ச.

நாமுன் னுடன்மதுரை நன்னகர்விட் டிங்குவந்தோஞ்
சோமவா ரம்மாலை சூட்டவரு வோமென்ரூர். ஞ.

தென்னர்பெரு மாடடியந்தத் தேவர்பெரு மானிடத்தி
லன்புதலைக் கொண்டிங் கணிமதுரை வந்தடைந்தாள். ரு.

வையைத் துறைச்சி வளர்பாண்டி நாடுடையாள்
தெய்வமணஞ் சேவிக்கத் தேசமன்னர் வந்தடைந்தார். எ.

எப்பொருளு மீன்ற விராசரா சேச்சுரியி
னெப்பின்மணங் கண்டுதொழ வும்பரெலாஞ் சூழ்ந்துவர. அ.

திங்கட் சடையழகர் சீர்மணக்கோ லம்பூண்டு
மங்களநல் வாத்யமுடன் மாமதுரை வந்தடைந்தார். க.

பொன்மாலை தான்விளக்கிப் பூமாலை யிட்டரசோ
டென்மாலை வென்ரூட் டிணைமாலை சூட்டுகென்ரூன். கo

கலைமகளும் பூமகளுங் கான்மஞ் சனமாட்டி
மலைமகளைச் சங்கரன்பால் வான்றவிசில் வைத்துநின்ரூர். கக.

சிவபெருமா னேடரசி சேர்ந்தா சனத்திருக்கை
பவளமலை மேற்படரும் பைங்கொடியை யொத்ததம்மா. கஉ.

காரணனார் நம்பிகையி னங்கை கரம்பொருத்திப்
பூரணமாய் நீர்வார்த்துப் பொற்கொடியைத் தத்தமென்றார். கஙு.

வேதன் சடங்கியற்ற மின்னிடையாள் பொற்சழுத்தி
னுதர்திரு மங்கலநா ணன்முகூர்த்தத் தில்லணிந்தார் கசு.

அங்கிசுழ்ந் தம்மிமிதித் தன்பி னருந்ததியின்
றங்குநிலைச் சுள்விளங்கத் தையலினை நோக்கியபின். கஙு.

பான்மொழியா ளோடுசொக்கர் பள்ளியறை சென்றுவந்து
மான்முதலோ ருக்கு வரிசை யருள்புரிந்தார். கசு.

கண்ணிமையாக் காட்சிதனைக் கண்ணுறலாற் காணவந்த
மண்ணுலகத் தாருமங்கே வானவரை யொத்திருந்தார். கஎ.

ஆட்டுவிப்பார் மாந்த ரறத்தின் மணந்தொழுகல்
காட்ட மணச்சடங்குங் காட்டுவித்தார் பூவுலகில். கஅ.

மிக்கசெங் கோல்புரிந்த மின்னலிடைப் பெண்ணரசைச்
சொக்கர்மணஞ் செய்துகொண்டு சுந்தரபாண் டியரானார். கஙு.

தக்கன்மகள் வெற்பன்மகள் தம்மைமணஞ் செய்தவன்றஞ்
சொக்கரிதைப் போலரசு தொல்லுரிமை பெற்றதுண்டோ. உ0.

மும்மைசிவ பூசை முடிமன்னர் செய்வதென
விம்மையே நன்மைதரு மீசரைமுன் பூசித்தார். உக.

சுந்தரரே பூசித்த தொல்குறியின் மேன்மைசொல
வந்தணனுஞ் சேடனுமே யாற்றூர்மற் றூரறிவார். உஉ.

நன்மைதரு வாரு நடவூரி னுயகியும்
புன்மைதவிர்த் தின்பம் புகட்டுவா ரிம்மையிலே. உங.

ஆகக் கண்ணிகள் - ரூசக.

சு-வது. வெள்ளியம்பலத்திருக்கூத்தாடிய திருவிளையாடல்.

திலலைநடங் கண்டு திருவமுதுண் மாமுனிவர்க்
கெல்லையந்த மாம்வெள்ளி யிச்சபைமே லாநடித்தார். க.

மூனம்வேதம் வேண்ட முதல்வர் மொழிந்தபடி
யனவரதத் தாண்டவமா மாடல்புரிந் தாரதிலே. உ.

ஆதிரைதொட் டாதிரைமட் டாடகக்கஞ் சம்முழுகிச்
சோதிமன்றி லந்தெழுத்துஞ் சொல்லிலெண்ணி யாங்கடைவர். ங.

ஆகக் கண்ணிகள் - ஈசஈ.

எ-வது. குண்டோதரனுக்கு அன்னமிட்ட திருவிளையாடல்.

தேவரீ ரோடுபலர் தெய்வமணங் காணவிங்கு
மேவுவரென் றுக்கமுதின் மீதம்வரை போலுமென்றுள். க.

பாண்டியரா சன்புதல்வி பாக்யவதி யேயன்னம்
வேண்டிஞ னிச்சிறுவன் வெம்பசியைத் தீர்க்கவென்றார். உ.

குடைபிடிப்போ னுக்குறலைக் கூட்டிப்போ யேவலர்கள்
மடைப்பள்ளி யிற்கண்டார் மற்றொன்றுங் கண்டிலரே. ங.

அன்னமலை யும்பின் னரிசிகாய்க் குன்றினையு
மின்னுதயிர் நெய்பால் மிடாவொடுமுட் கொண்டனனே. ச.

ஆகக் கண்ணிகள் - ஈசஅ.

ஆ-வது. அன்னக்குழியும் வையைப்மழைத்த திருவிளையாடல்.

ஐயா வரையனைய வன்னமுண்டு மேற்போருக்
கையமிட் டெண்ணு ரகடுபோற் காந்துமென்ரூன். க.

மலைபோ லிருந்தவன்ன மாய்த்தகுண் டோதரற்குத்
தொலையாவன் னக்குழியுந் தூயவையை யும்மழைத்தார். உ.

அன்னமுண்டு நீரருந்தி யண்ணல்பதந் துதித்தான்
முன்னவனைச் சோரின் முடியாப் பொருளுமுண்டோ ங.

ஆகக் கண்ணிகள் - ஈடுந.

ஙூ-வது. எழுகடலழைத்த திருவிளையாடல்.

மனவாக்காற் செய்தவத்தின் வாரிதிபோய்க் காயிகமாம்
புனலாடல் மேலென்று பொன்மாலை தான்விரும்ப. க.

அன்னைகட லாடிவர வாசையுற் றுளெனுமுன்
சொன்னதொன்றே வேழ்கடலுந் தொன்மதுரை யில்லழைத்தார்.

உப்புக் கரும்பிரச மொண்மதுபால் நெய்தயிர்நல்
லப்பாம் மெழுகடலு மப்போதே வந்தனவே. ங.

முழுமுதல்வே தங்களுக்கு முன்னழைத்த தீர்த்தத்தி
லெழுகடலுங் கூடி யெழுகடலென் றேவழங்கும். ச.

ஆகக் கண்ணிகள் - ஈடுடு.

கo-வது. மலயத்துவசனையழைத்த் திருவிளையாடல்.

கணவன்கை மைந்தன்கை கன்றின்வா லொன்றுபற்றி
யணிகடனீ ராடும்விதி யந்தணர்பாற் கேட்டன்னை. க.

நன்றிசெய்யாப் பாவிக்கு நாதன்மக னில்லையினிக்
கன்றின்வால் பற்றல் கதியா மெனமொழிய. உ.

தன்னையீன் றுயெரைச் சங்கரிபோய் நாயகற்குச்
சொன்ன ளயனரிக்குந் தொல்பதவி நல்குமண்ணல். ரூ.

எழுகடலி னீராட யிந்திரனே டேயிருந்த
வழுதியையு மேயழைத்து மாமியொடு மாட்டுவித்தார். ச.

கடலாடி நின்றூர் கரையேறச் சாரூப
வுடலாக்கித் தேர்மீ துயர்சிவலோ கஞ்சேர்த்தார். ரு.

மலயத் துவசன்பொன் மாலையொடும் பொற்சிகரம்
பலகாலு மேதிரும்பிப் பார்த்தபடி யேபோனான். சு.

ஆகக் கண்ணிகள் - ரூசூக.

ககo-வது. உக்கிரபாண்டியன் திருவவதாரத் திருவிளையாடல்.



வழுதிகுல மேலாக வாழ்கவெனத் தந்துதலின்
விழியிற் குமரனைத்தம் மின்கருப்பத் திற்பணித்தார். க.

கடலுமகா மேருவுங் கற்பகநாட் டிந்திரனு
மடங்கும் வகையோர்சேய் யம்மையிடந் தோன்றியதே. உ.

ஆகக் கண்ணிகள் - ரூசூரூ.

கஉ-வது. உக்கிரகுமாரனுக்கு வேல்வளை சேண்டு கொடுத்த திருவிளையாடல்.

சூழ்கைதனக் குக்ர குமாரனென நாமமிட்டு
வழங்கினர்வேல் செண்டு வளைகண் முடிதரித்தார். க.

ஏந்தல் குமரற் கிரவி குலேந்திரன்றன்
காந்திமதி மின்னைக் கடிமணஞ்செய் வித்துகந்தார். உ.

ஒண்ணுதலின் பேரழகை யுக்கிரனே டொப்பமைத்துப்
பெண்ணி னிலக்கணத்தைப் பேசினர் நூல்வாணர். ங.

அறுபத்தா றாயிரமாண் டண்ணலர சாண்டபின்னர்ச்
செறுவடிவே லுக்கிரற்குச் செங்கோலீந் தார்முதல்வர். ச.

ஆகக் கண்ணிகள் - ஈஈஎ.

கஈ-வது. கடல்சுவற வேல்விட்ட திருவிளையாடல்.

உக்ரன் கனவிற்போ யோங்கி வருங்கடன்மேற்
செக்கர்வேல் விட்டுத் திறல்வாகை சூட்டுகென்றார். க.

மதுரைமேற் செல்ல மகவான் விடுங்கடனீர்
கதிர்வேற் றிரித்தவுக்ரன் காலிற் பணிந்ததுவே. உ.

ஆகக் கண்ணிகள் - ஈஈகூ.

கசு-வது. இந்திரன் முடிமேல் வீளயேறிந்த திருவிளையாடல்.

கோல்வலியால் மாரிகுன்றக் கும்பமுனி சொல்வழியே
நீள்விசும்பு செல்ல நினைந்துபொற் ரூமரையில். க.

திங்கள்விர தம்புரிந்து தேவேந்த்ர ஞதனத்திற்
றங்கி யெழிலாரந் தாங்குபாண் டியரானூர். உ.

மழைபொழியா மேகங்கள் வந்துபொதி யஞ்சேரச்
செழியர்பிரான் றேர்ந்துபற்றிச் சேரத் தளையிலிட்டார். ரூ.

மாரிபொழி யாமுகில மாறன் சிறையிலிட்டுப்
போரில்வரு மிந்த்ரன்முடி போகவளை யாற்சிதைத்தார். சு.

தென்னன்வளை தன்முடியைச் சிந்தமன நொந்துசென்ரூன்
முன்னுள் மொழிந்த முனிவர்க்குப் பொய்யாமோ. டு.

இந்திரற்குத் தான்பிணையென் றேற்றவோர் வேளாளன்
தந்தமொழி வேதமெனத் தண்கார் சிறைவிடுத்தார். சு.

ஆகக் கண்ணிகள் - ரூஎடு.

கரு-வது. மேருவைச் சண்டாலடித்த திருவிளையாடல்.

மாநிபெய்யாக் காலத்தின்மாக்க டெரனைத்துந்
தீரும்வகை செண்டெடுத்துச் சென்ரூ ஜுமைமைந்தன். க.

இப்பரதந் தாண்டி யிமயமே மந்நிடத
வெற்புகண்டங் கிம்புருட மேவு மரிரூடம். உ.

சம்புநதி யேமநதி சாம்பூ நதவனம்போய்ச்
செம்பொ னிளாவிரதஞ் சென்றுகண்டார் மேருவினை. ஈ.

வடமேருச் சென்று வரைக்காரசைத் தானடக்கி
யிடஞ்சேர்செம் பொன்னெடுத்தங் கிட்டுவந்தார் மீன்குறியே. உ.

ஆகக் கண்ணிகள் - ஈஎக.

ஙசூ-வது. வேதத்துக்குப் பொருளருளிச்செய்த திருவிளையாடல்.

மூன்று மறையை முனிவர்தே ருத்துமறை
சொன்னபொரு ளேபொருளுஞ் சொல்லுமென வந்தடைந்தார். க.

மிக்கபுக ழுக்ரனருள் வீரபாண் டியனுளிற்
சொக்கர்சீவ தப்பொருளைச் சொல்லிமுனி வர்க்களித்தார். உ.

ஆகக் கண்ணிகள் - ஈஅக.

சஎ-வது மாணிக்கம்விற்ற திருவிளையாடல்.

வீரபாண்டி யன்புதல்வன் வேந்தர்முடி சூடுதற்குப்
பாரின்மா ணிக்கம் பகர்ந்தபி ஷேகனென்றூர். க.

மணியின் வகையும் மணிபிறந்த காரணமும்
மணிவாழ் புலமும் மணிக்குணமுந் தாமுரைத்தார். உ.

வைரநீ லம்பவளம் மாணிக்கம் பச்சைமுத்து
வைடூர்யங் கோமேதம் வல்ராகம் மாமணிகள். ங.

ஆகக் கண்ணிகள் - ஈஅசு.

கஅ-வது. வருணன் விட்ட கடலை வற்றச்செய்த திருவிளையாடல்.

சித்திரையிற் சித்திரைநா டேவேந்த்ர னிங்குவந்து
பத்தியொடு பூசிக்கும் பண்பறிந்து சொக்கரது. க.

அடிபரவிச் சூலைநோ யற்றிடச்செ யென்னுமற்
கடல்மதுரை சென்றழிக்கக் கற்பித்தா னீர்க்கடவுள். உ.

மகிமையறி யான்விடுத்த வார்கடலைத் தஞ்சடைவாழ்
முகிலன்குஞ் சென்று முழுதும் பருகவிட்டார். ங.

ஆகக் கண்ணிகள் - ஙஅஎ.

[கூடற்காண்டம்]

ககூ-வது. நான்மாடக்கூடலான திருவிளையாடல்.

வந்தகடல் வற்ற வருணன் மிகநாணி
யிந்தமது ராபுரிமே லேழுமே கம்விடுத்தான். க.

ஏழுமே கம்பொழிய வீசர்முகி ஞற்புறமுஞ்
சூழ்ந்தொன்றுக் கூடியதாற் சொன்னூர்பேர் கூடலென்றே. உ.

தான்செய் பிழைபொறுக்கத் தாள்பணிந்து நின்றிரக்க
நான்மாடக் கூடல்வளர் நாயகர்நோய் தீர்த்திட்டார். ங.

ஆகக் கண்ணிகள் - ஙகஉ.

உ0-வது. எல்லாம் வல்லசித்தரான திருவிளையாடல்.

கூடலிலாண் பெண்ணுதல் கூன்கிழம்பால் யம்மாதன்
மூடன்மறை தேர்தன் முதலனந்தஞ் சித்திசெய்தார். க.

மருபுலத்தி னற்பொருளை மாமதுரை யில்லழைத்தார்
திருவருளா லெல்லாச் செயலும் புரியவல்லார். உ.

ஆகக் கண்ணிகள் - ஈகஉ.

உக-வது. கல்லானைக்குக் கரும்பருத்திய திருவிளையாடல்.

எல்லாம்வல் சித்தரென வெங்கும்விளை யாடுமையர்
கல்லானை தின்னக் கரும்பீந் தருள்புரிந்தார். க.

கல்லானை கைந்நீட்டிக் கன்னலைவாய் வைத்துமென்று
வல்லான் வழுதிமுத்து மாலையையும் பற்றியதே. உ.

தகவுணர்ந்து தாழ்வழுதி தண்முத்து மாலையுமோர்
மகவையும் பெற்றுய்ய வைத்தார் கடைநோக்கம். க

ஆகக் கண்ணிகள் - ஈகஙு.

உஉ-வது. யானையெய்த திருவிளையாடல்.

சோழன்செய் மாரணத்திற் ரேன்றச் சமணரொரு
வேழத்தை முன்னழைத்து மீனவனைக் கொல்லவிட்டார். க.

ஓட்டார் மதுரையின்மே லோட்டி விடும்யானை
யட்டாலைச் சொக்கர்விடு மம்புபட்டு மாய்ந்ததுவே. உ.

வீழ்ந்தவுடல் யானைமலை விட்டமலம் லத்திழலை
போழ்ந்தநர சிங்கசரம் போற்றுநர சிங்கமுமாம். ரு.

ஆகக் கண்ணிகள் - ருகஅ.

உரு-வது. விருத்தகுமார பாலரான திருவிளையாடல்.

விருப்பாக்க னின்ற விரதமுடைக் கௌரியினிக்
கருப்பைபுகா தம்மைமனுக் கற்றுணர்ந்தா ளெந்தாண்டில். க.

பிச்சைபுகும் வைணவம்பூண் பிரம்சா ரிக்கவளை
யச்சமின்றித் தத்த மறைந்துதந்தை நீர்வார்த்தான். உ.

பிச்சைக்கு வந்தவனே பெண்ணுக்கு மாப்பிளையா
மிச்சை விதிவசமென் றியாரு மிசைந்தீந்தார். ரு.

கவுரிவடி வும்மனமுங் கண்டுபொரு மாமிதம
ரிவளையொரு நாளிருத்தி யிற்பூட்டித் தாம்போனர். ச.

சிவனடியா ரைக்காணச் சிந்தையுறும் பெண்மணிமுன்
றவவிருத்த வேதியராய்த் தாம்வந்தார் சொக்கேசர். ரு.

அழகை விழிபருக வாரருள வாய்வாழ்த்தக்
கழலைச் சிரந்தீண்டக் கட்டுண்டார் கௌரிநெஞ்சில். சு.

ஊட்டுவிப்பா ரூண்வேண்ட வொப்பில்லா டம்மவரிற்
பூட்டினரென் னத்தொடுமுன் பூட்டுவிடு மென்றுசொன்னர். எ.

கைதொடுமுன் பூட்டுவிடக் கற்பினரு ணுக்கியையர்
செய்யமலர்த் தாள்விளக்கிச் சென்னியகஞ் சுத்திசெய்தாள். அ.

கையமுது வாயிலுந்தேன் காலமுது காதிலுமாய்
மெய்யடியா ரூட்ட விருத்தர்குமா ரன்னனர். க.

கற்புடையா ளுண்ணடுங்கிக் கைகுவித்து வேர்த்தொதுங்கி
நிற்பவரிக் கன்பரைப்போ னிற்பவரு மிற்புகுந்தார். கஅ.

பரமனு ரப்பொழுதே டைங்குழவி யாகவதன்
வரவெதெனத் தேவதத்தன் மகவென்றுண் மாமிமற்றோர். கக.

சிவபத்தன் சேய்க்கன்பு செய்ந்நீயு மாகாயென்
றவளெமக வோடு மகற்றிவிட்டார் வீதியிடை. கஉ.

தாயில்லாப் பிள்ளைமுகந் தாளெச்சி யம்மைமனு
வாயோதக் கைக்குழவி வானில்விடை மேற்கண்டாள். கங.

அன்புருவாய் நிற்பவளை யம்மைவடி வாய்விடைமே
லன்பர்தொழ வேற்றி யலர்தூவத் தாமெழுந்தார். கச.

ஆகக் கண்ணிகள் - சகஉ.

உச-வது. மாறியாடின திருவிளையாடல்.

பரதவித்தை கற்பதின்மெய் பட்டதுயர் கண்டுதென்ன
னிரந்தரமோர் காலூன்றி நின்றுடு வார்முன்போய். க.

ஊன்றும்வலக் காலிடி யோங்குமிடக் கான்மாறி
யூன்று விடிலு னுயிர்துறப்பே னென்றிரக்க. உ.

அறுபத்து நாற்கலையு ளாடல்பயில் மாறனுக்கா
நறுமலர்க்கான் மாற்றி நடித்துவெள்ளி மன்றமர்ந்தார். ங.

தாளுடை வாடுஞ் சகமென்னும் பேறுடையா
ரேளை விதியோ யிறையாட்ட வாடினரே. ச.

அன்றுசொக்கர் செய்கூத்தை யாருமின்றுங்காணவெள்ளி
மன்றிலிடத் தாளூன்றி மாறிகடஞ் செய்தருள்வார். ரு.

ஆகக் கண்ணிகள் - சகள.

உரு-வது. பழியஞ்சின திருவிளையாடல்.

பழுமரத்தே னுண்டவம்பு பட்டிறந்த தன்மனையை
வழிவருமில் வேடனம்பான் மாய்த்தான்றென் றெழுறையோ. க.

என்றுரைக்க வேறுகரி யின்மையாற் பார்ப்பினியைக்
கொன்றவரைச் சொக்கேநீ கூறியரு ளென்றேறத்த. உ.

பார்ப்பினிக்கா வேடன் பழியஞ்சிச் செட்டிமண
மாப்பிளைபால் வேதியனு மாறனும்போய்க் காணவிட்டார். கூ.

ஆகக் கண்ணிகள் - சஉ0.

உசு-வது. மாபாதகந்தீர்த்த திருவிளையாடல்.

தாய்சேர்ந்து தந்தை தனைக்கொன் றலைந்துகெட்ட
மாப்பா தகனுமுய்ய மாபாவந் தீர்த்தாரே. க.

தீர்த்தபர னுடியநீர் தீர்த்திடலான் மாபாவந்
தீர்த்ததீர்த் தம்மெனும்பேர் செப்புவரிந் நாளிலுமே. உ.

அத்தீர்த்த மாடி யதிலுறைமண் ணேமருந்தாய்
நித்தியமுட் கொண்டவர நீங்கும் பிறவியுமே. கூ.

நுவலுநா லாயிரநா னூற்றுநாற் பத்தெட்டும்
பவநோய்சூன் யம்பில்லி பற்றுநாள் கோள்பயமும். ச.

ஆகக் கண்ணிகள் - சஉச.

உஎ-வது. அங்கம் வெட்டின திருவிளையாடல்.

வாட்பாணன் பத்தினிகை வந்துதொட்ட சித்தனையவ்
வாட்பாணன் போற்சொக்கர் வாட்டியங்கம் வெட்டினரே. க.

மற்றேர்ர் துணைகாணு மாணிக்க மாலதுய
ரற்றெழியச் செய்தா ரடியார்க் கெளியரிவர். உ.

ஆகக் கண்ணிகள் - சஉசு.

உஅ-வது. நாகமெய்த திருவிளையாடல்.

முன்விடுத்த யானைவிழ முற்றுமலை யாக்சண்டும்
பின்னுஞ் சமணரொரு பேராவை யேவிவிட. க.

சமணர்விடு நாகந் தனைவில்லா லெய்சழித்திட்
டமரும் விடம்போக வண்ணன்மதி யானனைத்தார். உ.

அந்நாகம் வீழ வதினுக முன்விழுந்த
பன்னகம் போலப் பருநாக மாகியதே. க.

ஆகக் கண்ணிகள் - சஉக.

உகூ-வது. மாயப்பசுவை வதைத்த திருவிளையாடல்.

கோவைச் சிவனடியார் கொல்லா ரெனுந்துணிவாற்
பாவநெறி யாரோர் பசுவைவர விட்டார்கள். க.

மதுரைமேன் மண்டிவரு மாயப் பசுவைநந்தி
புதுமையெழி லாலாவி போக்கிமலை யாக்கிவைத்தார். உ.

உலகறியத் தம்முருவை யோங்கிடபக் குன்றுக்கி
யிலகுருவாய் நந்தியண்ண லீசர்முன் வந்திருந்தார். ங.

ஆகக் கண்ணிகள் - சஙஉ.

ஙஐ-வது. மெய்க்காட்டிட்ட திருவிளையாடல்.

தென்னன் புதச்சேனை சேர்க்கநிதி கொள்ளையெனப்
பொன்னறையிற் சாமந்தன் போந்தபொருள் கைக்கொண்டு. க.

அண்டமுட்டுங் கோபுரமு மாயிரக்கான் மண்டபமுங்
கண்டிகையுங் கோளகையுங் கண்டான் பரமனுக்கு. உ.

வேள்வி யுபநயனம் வேதியர்மெய்ஞ் ஞானியரு
ளுளுக்கு நாளிரட்டி நன்னிதியாற் செய்வித்தான். ங.

திங்கள்குலக் கோளூசச் சேனைமெய் காட்டுகெனச்
சங்கரனைப் போய்ப்பணிந்து தானைவரு மாறெதென்றான். ச.

சவுந்தரசா மந்தத் தளபதியின் பத்திகண்டு
சிவகணத்தை மாப்படையாச் சேர்த்துவந்து தென்னன்முன். ஞ.

இப்படைக ளுன்பொருள்கொ ளின்னின்ன தேயமெனச்
செப்பித் தனித்தனியே சேனைமெய்க்காட் டிட்டனரே. சு.

ஆகக் கண்ணிகள் - சுஅ.

ஊக-வது. உலவாக்கிழியருளிய திருவிளையாடல்.

வழுதிகுல பூடணனுள் மாரிகுன்ற வாழ்வுகுன்றிக்
கழல்பரவி நிற்பான் கனவில்வந்து சொக்கேசர். க.

மழைக்கேது மாமன்றயம் மாமறைசொல் வேதியரை
யொழுக்கமொடு காவென் றுலவாக் கிழியீந்தார். உ.

உலவாக் கிழிப்பொன்னை யுற்றவந்த ணர்க்குதவும்
பலனுண் மழைபொழியப் பாண்டி செழித்ததுவே. ஊ.

ஆகக் கண்ணிகள் - சசக.

ஊஉ-வது வளையல் விற்ற திருவிளையாடல்.

மூனிமடவார் சற்புணர மூன்னோன் வருமழகுங்
கனிவாயுங் கண்டு கலைநாண் வளைதளர்ந்தார். க.

மனமோடப் பிச்சை வளையோடு மோடுபுக
வனமுனிவர் கூடல் வணிகர்பாற் றேரூன்றுகென்றார். உ.

கூடல் வணிகர் குலத்துதித்த சன்னியரைத்
தேடிப்போய்ச் சொக்கர் தெருவில்வளை விற்றுரே. ஊ.

தாருவனந் தன்னின்முனந் தம்பலியோ டிட்டவளை
தாருமென்பார் போலவரத் தாமே வளைதொடுத்தார். சு.

தொடுத்தார் வனையைத் தொலைவித்தார் முற்பவத்தைக்
கொடுத்தார் மகப்பேற்றைக் கூட்டினார் சம்பதத்தில். ரு.

ஆகக் கண்ணிகள் - சசசு.

ஈஈ-வது அட்டமாசித்தி யுபதேசித்த திருவிளையாடல்.

கந்தனுக்குப் பாற்கொடுத்துக் கண்ணுதல்சொல் சித்திபெற்றுப்
பந்தவினை யான்மறந்து பாண்டிவள நாடுவந்து. க.

பட்டமங்கை யாலிலற பாறையாம் பெண்சனுக்கு
மட்டசித்தி போத மருளி மனந்தெளித்தார். உ.

எமையுணர்ந்தார் வேண்டா ரெனினு மவர்பெருமை
தமையுலகத் தார்க்குணர்த்தத் தாழ்ழல்போற் சாருமென்றார். ங.

ஆகக் கண்ணிகள் - சசகூ.

ஈச-வது விடையிலச்சினையிட்ட திருவிளையாடல்.

காஞ்சிநக ராண்டுவரும் காடுவெட்டிச் சோழன்மிகு
